gistered No. M. 2330 'SIDDHANTHAM'

ACC-NO-33172 Vol. 24–No. 11

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

ர் 24 | கர கார்த்திகை 1951 நவம்பர் | இதழ் 11

உள்ளுறை | பக்கம்

பத்திராசிரியர் : சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

உதவிப் பத்திராசிரியர் : வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சைவ சித்தாந்த மகா சமாஜம்

10, முத்தையா முதலி தெரு, வேளாளதேனம்பேட்டை, சென்னை-6

"சித்தாந்தம்" வி. பி. அறிக்கை

1. "சித்தாந்தம் இருபத்து நான்காவது மலர் அடுத்த இத ழோடு முடிவடையும். ஜனவரிமீ முதல் 25-வது மலர் தொடங் கும். 25-வது மலரின் கையொப்பத் தொகை ரூபா மூன்றையும் ஒவ்வொருவரும் 1951ஆ டிசம்பர்மீ 31உக்குள் மகாசமாஜ காரியதரிசிக்குக் கிடைக்கும்படி மணியார்டர் செய்துவிட வேண் டும். தனித்தனியோ அல்லது ஒரே ஊரிலிருக்கும் பல சந்தாதாரர் கள் சந்தாத் தொகையைச் சேர்த்தோ அனுப்பும்போது மணியார் டர் கூப்பனிலாவது தனியே கார்டு மூலமாவது தங்கள் பெயர், விலாசம், சந்தா எண் முதலிய விவரங்களைத் தெளிவாக எழுதித் தெரிவிக்க வேண்டும்.

2. 1951ஆ டிசம்பர் 31உக்குள் 25-வது மலரின் கையொப் பத் தொகையைச் செலுத்தாத சந்தாதாரர்கட்கு அம்மலரின் முதல் இதழ் வி. பி. மூலம் அனுப்பப்படும். அவ்வாறு வி. பி. அனுப்பிப் பெற்றுக் கொள்வதனால் ஒவ்வொ[illegible]தாரருக்கும் வி. பி. ரிஜிஸ்தர் தபாற்கூலி வீண்நஷ்டமாகு[illegible].

3. சில நண்பர்கள் வி. பி. வருங்காலத்தில் பெற்றுக்கோள் ளாது மற்றொருமுறை வரும்படியாகத் தபாற்காரனுக்கு அறிவித்து விடுகிறார்கள். பிறகு தபாற்காரன் வி. பி. யைச் சில நாள் வைத் திருந்து "not claimed" (வேண்டப் படவில்லை) என்று குறித்து சமாஜத்துக்குத் திருப்பி விடுகிறான். இதனால் சமாஜத்துக்கு வி. பி. செலவு நஷ்டமாகிறது. இவ்வாறு வி. பி. திருப்பப்பட்ட சில நாட்களுக்குள் அந்த வி. பி. யைப் பெறவேண்டிய சந்தா தாரர் தாம் ஏதோ காரணம் சொல்லி மீண்டும் பத்திரிகையை அனுப்பும்படி கடிதம் எழுதுவது வழக்கமாக இருக்கிறது.

4. ஆகையால் அன்பர்கள் தயைசெய்து சமாஜத்துக்கு வீண் கஷ்டமும் நஷ்டமும் தாராமல் அடுத்தமலருக்குரிய கையொப்பத்தை முன்னதாகவே அனுப்பி வைப்பது பேருபகாரமாகும் என்று நமது சந்தா நேயர்களுக்கு அறிவிக்கிறோம்.

5. பணம் அனுப்பும் ஒவ்வொருவரும் தமது முழுப்பெயர், விலாசம், சந்தா எண் ஆகிய விவரங்களைத் தெரிவித்தல் அவசிய மாகும்.

6. இவ்வாண்டு பத்திரிகையைத் தருவித்தும் ஒவ்வொரு நேயரும் புதிதாகப் பல சந்தாதாரரைச் சேர்த்துத் தரல் வேண்டு கிறோம். அல்லது ஒரு சந்தாதாரரையேனும் அடுத்த ஆண்டுக்குச் சேர்த்து அவர் கையொப்பத்தையும் சந்தா தொகையையும்

Reg. M. 2330

உ

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 24 | கர கார்த்திகை 1951 நவம்பர் | இதழ் 11

நாட்டு ஒலி

அறநிலையங்கள்

1. பிரிவினை : நமது அறநிலையங்களைப்பற்றி ஏற்பட்டிருக்கும் சட்டம் 11 அதிகாரங்களையும் 106 பிரிவுகளையும் கொண்டது. முதலில் அச்சட்டத்தின் நோக்கம் கூறப்பட்டுள்ளது. சென்னை இராச்சியத்தில் உள்ள இந்து மத சமய நிலையங்களும் மற்ற அறநிலையங்களும் கட்டளைகளும் நன்முகப் பரிபாலனம் செய்வதற்காக இச்சட்டம் ஏற்பட்டிருக்கின்றது என்றும், அதற்காக ஏற்கனவே இருக்கும் சட்டத்தைத் திருத்தியும் ஒழுங்குபெற அமைத்தும் செய்யப்பட்டிருக்கின்றது எனறும் கண்டிருக்கிறது. இந்த பீடிகைக்குப்பின் ஏற்படுத்தியிருக்கிற 11 அதிகாரங்களில் முதல் அதிகாரம் முன்னுரையாக நோக்கங்கள், வரையறைகள், வியாபகம் முதலிய விஷயங்களைக் கூறுகின்றது. அதில் சிறப்பாக இந்தச் சட்டம் சென்னை இராச்சியத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தானங்கள் உட்பட எல்லாப் பொதுச் சமய நிலையங்களுக்கும் கட்டளைகள் முதலிய சொத்துக்களுக்கும் இந்தச் சட்டம் செயல் முறைக்கு வரும் என்றும் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ஒரு தேதிக்குப்பின் ஜைன ஆலயங்களுக்கும் இச்சட்டம் செலுத்தப்படும் என்றும் கண்டிருக்கிறது. மேலும் அரசாங்கத்தாரால் குறிக்கப்பட்ட ஒரு

தேதியிலிருந்து சமயச்சார்பு அல்லாத மற்ற அறநிலையங்களுக்கும் இச்சட்டம் செல்லுபடியாகும் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் இப் பொதுவிதிக்கு விலக்காக ஏற்கனவே அபிஷியல் டிரஸ்டி (Official Trustee) அட்மினிஸ்டேட்டர் ஜெனரல் (Administrator General) என்பவர்களின் வசத்தில் இருக்கும் சொத்துக்கள் ஒதுக்கவும் சேர்க்கவும் அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு.

இந்தச் சட்டத்தில் சொல்லியிருக்கும் சில சொற்களுக்கு வரையறை அல்லது பொருள் இந்த அதிகாரத்திலேயே கூறப்பட்டுள்ளது. இந்தச் சட்டப்படி அதிகாரவர்க்கத்தினருடைய உத்தியோகப் பெயர்கள் இன்ன இன்னவை என்று கூறப்பட்டுள்ளன. சென்ற சஞ்சிகையில் அப்பிரிவுகளைக் குறித்துள்ளோம். சமய நிலையம் என்பதில் கோயில், மடம், கட்டளை என்பன அடங்கும். அவற்றில் கோயில் என்பது சமய ஆராதனைக்காக ஏற்பட்டுள்ள இடம். இந்து சமூகத்தார்க்குப் பொதுவாகவும் பகுதிகளாகவும், அவர்களுடைய நன்மைக்காகவும் உரிமை பாராட்டிக் கொண்டும் பொதுவாகச் சமய ஆராதனைக்குப் பயன்படும் இடமாகும். கட்டளை என்பது ஒரு கோயிலிலோ அல்லது மடத்திலோ குறிப்பிட்ட ஆராதனை அல்லது தர்மம் இவைகளைச் செய்வதற்காக ஏற்படுத்தி யிருக்கும் சொத்து அல்லது நிதி ஆகும். மடம் என்பது ஒரு இந்து சமய நிலையம். அதற்குச் சொத்து உண்டு. தலைவர் ஒருவர் உண்டு. அத்தலைவர் தன் சீடர்களுக்குச் சமய உபதேசமும் சமயசேவையும் செய்வதே கடமையாக உள்ளவர். தன் சீடர் கூட்டத்திற்குச் சமயத் தலைமை கொண்டவர். அப்படிப்பட்ட நிலையமும் அதற்குச் சார்ந்த இடங்களும் மடம் என்பதில் சேரும். அரசாங்கத்து எல்லைக்கு வெளியே ஒரு மடத்தின் தலைமை ஸ்தானம் இருந்து அதனுடைய சொத்துக்கள் இதன் எல்லைக்குள் இருந்தால் அச்சொத்துக்களைப் பொறுத்த மட்டில் இச்சட்டம் அமுலுக்கு வரும். தனிமையான சமய அறங்களும், ஒருமடமோ ஒருகோயிலோ அவைகளுக்குச் சம்பந்தப்பட்டிருந்தாலும், இல்லாமலிருந்தாலும், அவைகளுக்கும்

இந்தச்சட்டம் செலவாணி ஆகும். சமய நிலையங்களுக்குச் சம்பந்தப்பட்ட அர்ச்சகர் முதலிய திருப்பணியாளர்களுக்கு இனுமாக விடப்பட்ட எல்லா சொத்துக்களும் சமயக் கட்டளைகள் ஆகும். அப்பணியாளர்களுக்கு அவைகள் சொந்தமானவைகள் அல்ல. சமயச் சார்பல்லாத அறநிலையங்கள் என்ருல் இந்து ஜைன சமூகங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட அறநிலையங்களாகும். அவைகள் சத்திரங்கள், பாடசாலைகள், கல்லூரிகள், அன்னதான சாலைகள், வைத்திய நிலையங்கள் முதலியவைகள் எல்லாம் அடங்கும். தர்மகர்த்தர் அல்லது அறக்காப்பாளர் இரண்டு வகைப்படுவர். ஒருவர் சாதாரண தருமகர்த்தர். அவர் ஒரு சமய நிலையத்தைப் பரிபாலிப்பவர். இரண்டாவது பாம்பரை தர்மகர்த்தர். பழைய வழக்கத்தின்படி பாம்பரையாக ஒரு நிலையத்தைப் பரிபாலிக்கும் உரிமைகொண்டவர். அல்லது அந்நிலையத்தை ஸ்தாபித்தவர் ஏற்படுத்திய முறையின்படி அதிகாரம் பெற்றவர். இதுவரை கூறிய பொருள்களில் அந்தந்தச் சொற்கள் உபயோகிக்கப்படும்.

2. அதிகாரவர்க்கத்தினர்: அதிகாரவர்க்கத்தினர் நான்கு வகைப் படுவர் என்று சென்ற சஞ்சிகையிலேயே கூறியிருக்கின்ரேம். அவர்களை அரசாங்கத்தார் நியமிப்பார்கள். கமிஷனர் ஒருவர். டிபுடி கமிஷனர் மூவர். அஸிஸ்டெண்டுகமிஷனர் பலபேர். இவர்களில் இத்தனைபேர் இன்ன இடத்தில் அதிகாரம் செலுத்தவேண்டும் என்பதை அரசாங்கம் நியமிக்கும். அவர்கள் எல்லாரும் இந்து சமயத்தினராகவே இருக்கவேண்டும். இந்து சமயத்தை விட்டு நீங்கினுல் அவர்கள் வேலையும் நீங்கும். கமிஷனருக்கு இந்தச் சட்டத்தின்படி முழு அதிகாரம் உண்டு. தம் அதிகாரத்தில் சிற்சில உரிமைகளை மற்ற அதிகாரிகளுக்குக் கமிஷனர் கொடுக்கலாம்.

நான்காவது அதிகாரவர்க்கமாகிய நிலத்தொகுதிக் குழு (ஏரியா கமிட்டி) அஸிஸ்டெண்டு கமிஷனருடைய எல்லையிலுள்ள கோயில்களை ஆட்சிசெய்ய நியமிக்கப்படும். அக்குழுவில் 3 முதல் 5 அங்கத்தினர்கள் வரையில் இருக்க

லாம். அவர்களை அரசாங்கம் நியமித்தது முதல் மூன்று வருடங்கள் இருக்கலாம். இந்து மதத்தை விட்டாலோ இன்சால்வெண்டு ஆனாலோ பயித்தியம், குஷ்டம் முதலிய வியாதிகள் வந்தாலோ, தர்மகர்த்தாவாக இருந்தாலோ, குறிப்பிட்ட குற்றவாளியாக ஆனாலோ, இந்தவேலை எடுபட்டு விடும். குழுவிற்கு அஸிஸ்டெண்ட் கமிஷனர் தலைவராக இருப்பார். குழுவில் செய்யப்படும் தீர்மானங்கள் கமிஷனருக்கு அனுப்பப்படும்.

மேலே கூறிய அதிகாரிகளில் டிபுடி கமிஷனர் அஸிஸ்டெண்ட் கமிஷனர், குழு, தர்மகர்த்தர் முதலானவர்களுடைய நடவடிக்கைகளைக் கமிஷனர் பரிசோதனை செய்யலாம். உத்திரவுகளை மாற்றவும் மீண்டும் விசாரிக்கும்படித் திருப்பி அனுப்பவும் அவருக்கு அதிகாரம் உண்டு. தான்முடிவு செய்யும். வரைக்கும் எதையும் நிறைவேற்றக்கூடாது என்று அவர் உத்திரவும் இடலாம். ஒரு அதிகாரியினுடைய விசாரணையை மற்றொரு அதிகாரிக்கு மாற்றலாம். நிலத்தொகுதி குழு ஒழுங்காக வேலை செய்யாவிட்டால் அவ்வேலையைக் கமிஷனர் தானே செய்யலாம். அல்லது வேறு அதிகாரியைச் செய்யச்சொல்லலாம். மேற்கண்ட விஷயங்களில் யாருக்காவது குறைவு ஏற்பட்டால் அதைக் குறித்து அரசாங்கத்தாருக்கு மூன்றுமாதங்களுக்குள் அப்பீல் செய்து கொள்ளலாம்.

3. சமய நிலையங்களைப் பற்றிய விதிகள்: சட்டத்தின் மூன்றாவது அதிகாரத்தில் சமய நிலையங்கள் எல்லாவற்றைப் பற்றியும் பொது விதிகள் 17 பிரிவுகளிலும் மடம் கட்டளை இவைகள் அல்லாத சமய நிலையங்களைப் பற்றிச் சிறப்புவிதிகள் 15 பிரிவுகளிலும் கூறப்பட்டுள்ளன. பொதுவிதிகளைப் பற்றி முதலில் விவரிப்போம். சென்னை அரசாங்கத்திலுள்ள எல்லா சமய நிலையங்களும் கமிஷனரின் அதிகார வரம்பிற்கு உட்பட்டிருக்கும். அந்த அதிகாரப்படி எல்லா நிலையங்களும் சரியாகப் பரிபாலிக்கப் படுகின்றனவா அவைகளின் வருமானங்கள் சரியாகச் செலவழிக்கப் படுகின்றனவா என்ற மேற்பார்வை அவருக்கு

உண்டு. அதற்காக அவரும் அவருக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகளும் உத்தியோகஸ்தர்களும் எப்படிப்பட்ட சமயநிலையம் ஆனாலும் ஆராதனை இடமானாலும் தங்கள் அதிகாரங்களைச் செலுத்துவதற்காக உள்ளே செல்லலாம். அவ்வாறு செல்லும்போது யாராவது தடை செய்தால் அந்த நிலையத்தில் அதிகாரம் கொண்ட மாஜிஸ்ட்ரேட் ஒரு போலீஸ் அதிகாரியை அனுப்பி அத்தடையை நீக்குவதற்கு உத்திரவு செய்யலாம். ஆனால் அப்படி நீக்க உத்திரவு அளிக்கப்படும் அதிகாரி இந்துவாக இருக்கவேண்டும்.

தர்மகர்த்தாவாக நியமிக்கப் படுபவர் இந்து சமயத்தானாக இருக்கவேண்டும். பாரம்பரை தர்மகர்த்தாக்களைத் தவிர மற்றவர்கள் 25 வயதுக்கு உட்படாமலும் 75 வயதுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும். எல்லா தர்மகர்த்தாக்களுக்கும் அரசாங்கத்தாராலும் கமிஷனர் முதலிய அதிகாரிகளாலும் வெளியிடப்படும் உத்தரவுகளுக்கு அடங்கி நடக்கவேண்டும். தர்மகர்த்தாக்கள தங்கள் அதிகாரத்திற்கு உட்பட்ட சமய நிலையங்களை அந்நிலையங்களின் நோக்கத்தின்படியும் விதிகளின்படியும் சட்ட நிபந்தனைகளுக்குட்பட்டுப் பரிபாலனம் செய்யவேண்டும். அப்படிச் செய்வதில் தன் சொந்த சொத்துக்களை எத்தனை ஜாக்கிரதையுடன் காப்பாற்றுவானோ அதே முறையில் சமயச் சொத்துக்களையும் காப்பாற்றவேண்டும். அப்படிச் செய்வதில் பரிபாலன உரிமைகள் முழுவதும் அவனுக்கு உண்டு. சமய நிலையத்தின் அனுகூலத்திற்காகச் செலவுகள் செய்யலாம். ஆனால் தன் பேரில் ஒழுங்கு நடவடிக்கையோ குற்றமோ இவைகளுக்காகச் செய்யும் செலவுகளுக்கு முந்திய உத்திரவின்றி நிலயச் சொத்திலிருந்து எடுக்கப்படாது.

எல்லா சமய நிலையங்களிலும் ஒரு வாலாற்று ஏடு (Register) எழுதிவைக்க வேண்டும். அதில் எழுதவேண்டியவைகள் :—

1. தர்மகர்த்தாக்களின் பெயர், வரிசை, பாரம்பரை பாத்யம்.

2. பரிபாலனத்திட்டம், செலவுத் திட்டம்.

3. சம்பள ஊழியர்கள், மற்ற ஊழியர்கள், அவர்களின் பாத்யதைகள்.

4. நகை, தங்கம், வெள்ளி, ரத்தினம், பாத்திரங்கள், மற்றச்சாமான்கள்-ஜாப்தாவும் விலைகளும்.

5. கட்டளைகளும், சாசனங்களும்.

6. விக்கிரகங்களும் அவற்றின் விவரங்களும்.

7. கமிஷனரால் குறிப்பிடப்படும் மற்ற விவரங்கள்.

மேலே கண்ட ரிஜிஸ்டரை எழுதி உறுதிமொழியிட்டுக் கமிஷனருக்கு அனுப்பவேண்டும். அதிகாரிகள் அவற்றைப் பரிசீலனை செய்து முடிவான உத்தரவு செய்யலாம். அவைகளின் பிரதிகள் ஒவ்வொரு அதிகாரிக்கும் அனுப்பப்பட வேண்டும். அப்படிப்பட்ட ரிஜிஸ்டரை ஆண்டுக்கு ஒரு முறை பரிசோதனை செய்யப்பட்டு திருத்தப்பாடு செய்ய வேண்டும்.

தர்மக்கர்த்தா அவ்வப்போது கணக்குக் குறிப்புக்களைக் கமிஷனருக்கு அனுப்பவேண்டும். அவசியமானபோது அதிகாரிகள் சொத்துக்களையும் சாசனங்களையும் பார்வை இடலாம்.

தர்மகர்த்தாக்கள் கிரயம் அடமானம் ஐந்து வருஷத்திற்கு மேற்பட்ட குத்தகை முதலியவைகளைச் செய்தால் அவைகள் ரத்து ஆகும். ஆனால் அவைகளைக் கமிஷனரின் உத்திரவின் பேரில் செய்யலாம், அதற்குப் பல நிபந்தனை உண்டு. தர்மகர்த்தாக்கள் அடியில் கண்ட வேலைகளுக்குப் பணங்களைச் செலவழிக்கலாம்.

1. சீடர்கள், யாத்திரிகள், பிரார்த்தனைக்காரர்கள் இவர்களுடைய சுகாதாரமும் சௌகரியமும்.

2. அர்ச்சகர்கள், அத்தியக்ஷகர்கள், வேதபாராயணர்கள், ஓதுவார்கள் என்பவர்களின் பயிற்சி இவைகளைப்பற்றி செலவு செய்கையில் அதிகாரிகளின் உத்திரவுப்படி நடக்க வேண்டும். நிலையத்தின் செலவு போக மீதி ஆகும் பணங்களை பின்னால் குறிப்பிட்ட இதர விஷயங்களுக்கு உத்திரவின் பேரில் செலவழிக்கலாம். அதிகாரிகள் சில குறிப்

பிட்ட சேவைகளைச் செய்யும்படி தர்மகர்த்தாக்களை வற்புறுத்தலாம். கட்டளைகளுக்கு ஏற்பட்ட தர்மகர்த்தா அவைகளைப் பரிபாலனம் செய்யும்போது அவைகள் எந்த நிலையத்திற்குச் சேர்ந்தனவோ அந்த நிலையத்துத் தர்மகர்த்தாவினுடைய மேற்பார்வையில் செய்யவேண்டும்.

தேவதாசிகளைப் பற்றி ஒரு பிரிவும் மற்ற இனம்களைப்பற்றி மற்ருெரு பிரிவும் விவரமாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

சமயநிலையத்திற்குச் சேர்ந்த எந்த அதிகாரியோ ஊழியனோ அந்த நிலையத்திற்குச் சேர்ந்த நகை முதலிய சொத்துக்களைத் தங்கள் வசம் வைத்திருக்கக்கூடாது.

4. சாதா சமய நிலையங்கள் : மடங்களும் மடங்களுக்குச் சம்பந்தப்பட்ட கட்டளைகளும் நீங்கலாக மற்றச் சமய நிலையங்களைப் பற்றிச் சில சிறப்பு விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆண்டிற்கு 20000 ரூபாய்க்குக் குறையாமல் வருமானம் வரக்கூடிய சமயநிலையங்களின் ஜாப்தா ஒன்றைக் கமிஷனர் தயாரிக்கவேண்டும். அவ்வப்போது அந்த ஜாப்தாவைப் பரிசீலனை செய்து அதன் எண்ணிக்கையைக் கூட்டவும் குறைக்கவும் செய்யவேண்டும். அப்படிப்பட்ட நிலையங்களுக்கு மூன்று முதல் ஐந்துவரை தர்மகர்த்தாக்களைக் கமிஷனர் நியமிக்கலாம். பாரம்பரை தர்மகர்ததாவும் பாரம்பரை இல்லாத் தர்மகர்த்தாக்களும் ஒரு நிலையத்திற்கு இருந்தால் இல்லாதவர்களை மட்டும் நியமிக்கலாம். அப்படி நியமித்தால் நியமிக்கப்பட்டவர் ஐந்து வருடம் வேலை செய்யலாம். இடையில் நீக்கவும் தள்ளவும் கமிஷனருக்கு அதிகாரம்உண்டு. அவ்விதத் தர்மகர்த்தாக்கள் தங்களில் ஒருவரைத் தலைவராகத் தெரிந்து கொள்ளலாம். 20000க்குக் குறைவாக உள்ள சமய நிலையங்களுக்குத் தலத்தொகுதிக் குழு அல்லது ஏரியா கமிட்டி மேலே கண்டபடி தர்மகர்த்தாக்களை நியமிக்கலாம். மேற்படி நிலையங்களுக்கு முந்தியே பரிபாலனத் திட்டம் இருந்தபோதிலும் தர்மகர்த்தாக்களை நியமிக்கலாம். இவ்வாறு தர்மகர்த்தாக்களை நியமிப்பதில் எந்தச் சமய வகுப்பார்களுக்கு எந்த நிலையம் வகுக்கப்

பட்டதோ அந்தச் சமயத்து மக்களையே கூடியமட்டிலும் தர்மகர்த்தாக்களாக நியமிக்கவேண்டும். தர்மகர்த்தாக்களை நீக்குவதற்கு டிபுடிகமிஷனருக்கும், கமிஷனருக்கும் உரிமை உண்டு. அது வருமானத்தைப் பொறுத்து இருக்கும். நீக்குவதற்குக் காரணங்கள் :

1. கணக்குகள் அறிக்கைகள் அனுப்பத்தவறுதல்.
2. உத்திரவுகளுக்குக் கீழ்ப்படியாதிருத்தல்.
3. நம்பிக்கைத் துரோகம், திருட்டு முதலியன.
4. சொத்துக்களை நஷ்டமாக்குதல்.
5. மூளைக்கோளாறுகள்.

மேற்சொன்ன காரணங்களுக்காக நீக்குதல் செய்வதற்கு முந்தி விசாரணைச் செய்து தீர்ப்பு சொல்லிப் பிறகே நீக்கவேண்டும். மேற்படி தீர்ப்புக்கு மேல் அதிகாரிகளுக்கு அப்பீல் உண்டு.

பரம்பரைத் தர்மகர்த்தா ஸ்தானம் காலியானல் அவருக்கு அடுத்த வார்சை நியமிக்கவேண்டும். பாம்பரை தர்மகர்த்தா நீக்கப்பட்டு வேறு ஒருவர் நியமிப்பதற்கு இடையில் தற்காலிகமாக ஒருவரைத் தர்மகர்த்தாவாக நியமிக்கலாம்.

சமயநிலையங்களில் வேலைசெய்யும் உத்தியோகஸ்தர்களையும் ஊழியர்களையும் தர்மகர்த்தா நியமிக்கலாம். பரம்பரை ஊழியர்கள் ஆனல் அடுத்த வாரிசை நியமிக்க வேண்டும். வார்சைப்பற்றிய தகாராறு ஏற்பட்டால் தற்காலிகமாக வேறு ஓர் ஆளை நியமிக்கலாம்.

சமயநிலையங்களில் வேலை செய்யும் ஊழியர்களைத் தர்மகர்த்தா ஆளவேண்டும். அவர்களை நீக்கவும் அபாரதம் போடவும் அவருக்கு அதிகாரம் உண்டு. தர்மகர்த்தாவின் மேல் டிபுடி கமிஷனருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

சமய நிலையங்களில் அர்ச்சனை முதலிய காரியங்களுக்கு வரிவிதிக்கவும் அர்ச்சகர்களுக்கு ஊதியம் கொடுக்கவும் தர்மகர்த்தாக்களுக்கு அதிகாரம் உண்டு. சமய நிலையத்தின் செல

வுத் திட்டத்தைத் தர்மகர்த்தா தயாரித்துத் தலத்தொகுதி குழுவிற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பவேண்டும். அக்குழுவிற்கு அதனை அங்கீகரிக்கவோ மாற்றவோ அதிகாரம் உண்டு. அதற்குமேல், மேல் அதிகாரிக்கு அப்பீலும் உண்டு.

மேலே சொன்ன விதிகள் சமய நிலையங்களைப் பற்றி ஏற்பட்டவை. இவைகளில் தர்மகர்த்தாக்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் அதிகாரங்கள் இதுவரை இருந்ததைவிட அதிகமாக இருக்கின்றன. ஆனாலும் அவ்வதிகாரங்களைத் தம் இஷ்டப்படி நடத்தாமல் இருக்கும்பொருட்டு மேல் அதிகாரிகளுக்கு அப்பீல் உரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றது.

---

2. தலப்பகுதி

திருமயிலை

(கோவை கிழார்)

1. இடம் :—தற்காலச் சென்னை நகரில் ஒருபகுதி. திருவல்லிக்கேணிக்கும் அடையாற்றிற்கும் இடையில் கடற்கரை ஓரமாக உள்ள பகுதி. திருவொற்றியூர் திருவான்மியூர் என்ற இரண்டு தியாகேசர் ஆலயங்களாகிய பாடல் தலங்களுக்கும் இடையில் உள்ள ஒரு பாடல் தலம். மயிலை, மயிலாப்பு, மயிலாப்பூர் என்ற பெயர்களால் பண்டைநாள் முதல் வழங்கி வந்த ஒரு சிறந்த புனித நகரம்.

2. கோயில்:—தற்காலத்தில் உள்ள கோயில் கடற்கரைக்கு மேற்கே முக்கால் கல் தள்ளி இருக்கிறது. அது நாற்புறமும் நான்கு பெரிய மாடவீதிகள் அமைய இடையில் உள்ளது. கோயில் மேற்குப் பார்த்த சந்நிதி. மேற்கே உள்ளவாயில் சிறியது. அக்கோபுரமும் வெகு சிறியது. கிழக்கே ஒரு கோபுரவாயில் உண்டு. அது மிகப்பெரியது. அக்கோபுரத்திற்கு எதிரே உள்ளது பிள்ளையார் சந்நிதியாகும். இந்த வேற்றுமை குறிப்பிடத் தக்கது. பதினாறு கால்கொண்ட திருவிழா மண்டபம் கீழ்க்கோபுரத்

திற்கு எதிரே உள்ளது. இதிலேதான் மூர்த்திகளை எழுந்தருள வைத்து அங்கிருந்து நான்கு வீதிகளிலும் எழுந்தருளச் செய்வார்கள். சுவாமி சந்நிதி கீழை வாசலில் இருந்தால், எவ்வாறு உற்சவம் நடைபெறுமோ அவ்வாறு இங்கே மேற்கு வாசலாக இருந்தும் கீழ்ப்புறமாகத் தொடங்கி நடைபெறுகின்றது. கோயிலுக்குள் அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. இரண்டு சந்நிதிகளையும் இணைக்கும் பெரிய மண்டபத்தில் ஒரு இடத்தில் இருந்து சுவாமியையும் அம்மையும் ஒருமிக்கத் தரிசிக்கலாம். சுற்றுப் பிரகாரத்தில் வடபுறம் அம்மையே சுவாமியை மயில் உருக் கொண்டு புன்னை மரத்தடியில் தவம்புரிவதைக் காணலாம். சிங்காரவேலர் சந்நிதி கோயிலின் தென்கிழக்கில் உள்ளது. வாயிலார் நாயனர் சந்நிதி தெற்குப் பிராகாரத்தில் வடக்கு நோக்கி இருக்கிறது. சுவாமி – காபாலீசர்; அம்மை – கற்பகவல்லி; விருக்ஷம்–புன்னை; தீர்த்தம்–காபாலி தீர்த்தம்.

3. திருக்குளம் :—கோயிலுக்கு மேற்கே உள்ளது. வெகு அழகாகவும் பெரிதாகவும் அமைந்துள்ளது. கோயில் அளவை விடப்பெரியது. தெப்பத்திருவிழா மிகச்சிறப்பாக இருக்கும். இந்தத் தெப்பக்குளத்தைப் பற்றி ஒருகர்ண பரம்பரை வழங்குகின்றது. முகமதிய நவாப் இந்த இடத்தில் ஒரு பள்ளிவாசல் கட்டியிருந்தானும். வைதீகர்கள் அதனை வெறுத்தார்கள். அமைச்சன் இந்துவாக இருந்தான். நவாப் இல்லாதபோது ஒரே இரவில் அந்த இடத்தில் குளத்தைத் தோண்டிவிட உத்திரவளித்துவிட்டான். நவாப் வந்தபிறகு தகுந்த காரணம் சொல்லிச் சரிபடுத்திவிட்டு, முகாத்தின்போது தாஜிகளை இக்குளத்தில் கழுவுதற்கு அனுமதி கொடுக்கச்செய்து குளத்தைத் திரப்படுத்திவைத்தானும்.

4. ஐதீகங்கள் :—தேவியார் மயிலுருக் கொண்டு பூசித்தது கண்டு ஊர் மயிலை எனப்பெயர் உற்றது. இராமபிரான் பெருமானைப் பூசித்துப் பேறுபெற்று ஐப்பசி ஓணத்தில் பிரம்மோற்சவம் நடத்தினதாகத் தலபுராணம் கூறும். ஐப்பசி ஓணத்திருவிழா பூம்பாவைப்பதிகத்திலும் வருதல்

காண்க. சிவநேசர் புதல்வி பாம்புக்கடியால் இறக்க உடலை சாம்பலாக்கிச் சேமித்துவைக்க ஞானசம்பந்தர் பூம்பாவைப் பதிகம் பாடி உயிர்ப்பித்ததைப் பெரியபுராணம் கூறும். இவ்விழா பிரம்மோற்சவத்தில் எட்டாம் நாளில் நடைபெறும்.

5. மற்ற சந்நிதிகள் :—திருக்குறள் அருளிய திருவள்ளுவர் கோயில், முண்டகக் கண்ணி அம்மைத் தெருவில் இருக்கிறது. மற்றச் சிவாலயங்கள் திருக்கோயிலைச் சுற்றிலும் பல தெருக்களில் உள்ளன. அவைகள் வெள்ளீசர், வாலீசர், மல்லீசர், வாணீசர், விருபாக்ஷீசர், தீர்த்தபாலீசர் முதலியன. மேலும் திருமால் கோயில்களும் இரண்டு உண்டு. மற்றும் இந்தத் தலமே இரண்டாம் ஆழ்வாரான பேயாழ்வார் அவதரித்த தலம். அவர் அவதரித்ததாகக் கூறும் கேணிகள் இரண்டு உண்டு. மாதவப் பெருமாள் வடக்கேயும் கேசவப்பெருமாள் கோயில் தெற்கேயும் உள்ளன. குளங்கள் இரண்டிலும் தெற்கே உள்ளதின் பெயர் சித்திரக்குளம்.

6. பண்டைய சரித வரலாறு :—இது ஒரு பண்டைத் துறைமுகப்பட்டினம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே கிரேக்க ஆசிரியன் தாலமி என்றவன் இந்நகரை மல்லியார்ப்ப என்கின்றான். கடைச்சங்கக் காலத்தில் இருந்த திருவள்ளுவர் இவ்வூரில் வாழ்ந்தார். அவருடைய நண்பர் ஏலேலசிங்கர் கப்பல் வர்த்தகம் செய்தது இவ்வூரில்தான். திருநாவுக்கரசர் மூன்றிடங்களில் 'மயிலாப்பு' என்று கூறுகிறார். சம்பந்தர் 'மயிலை' என்கின்றார். பல்லவர் காலத்தில் இருந்த திருமங்கையாழ்வார் 'மாடமாமயிலைத் திருவல்லிக்கேணி' என்ற பாடலில் மயிலையைக் குறிக்கின்றார். நம்பியாரூரர் 'தொல்மயிலை' என்கின்றார். அவர்காலத்திலேயே இந்நகர் தொன்மை பெற்றிருந்தது. கங்கப்பல்லவன கம்பவர்மன் காலத்தில் பொறித்த கல்வெட்டு ஒன்றில் மயிலையில் அரசகுடும்பத்தினர் வசித்தனர் என்று கூறப்பட்டுள்ளது. சோழர்காலத்தில் பல கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டன. அவைகளில் ஒன்று முதலாம் இராஜராஜசோழன்

கல்வெட்டு ஆகும். மற்ருென்றில் 'நானு தேசி' என்ற வாணிபச் சங்கம் இருந்தது குறிக்கப்பட்டுள்ளது. மற்ருென்றில் 'பூம்பாவை' என்ற சொல் வருகின்றது. சேக்கிழார் சுவாமிகள் இவ்வூரை 'மயிலை' என்றும், 'மயிலாப்பூர்' என்றும் குறிக்கின்ருர். பூம்பாவைச் சரிதம் முற்றும் அவர் அருளிச் செய்திருக்கின்ருர். விஜயநகரத்தார் காலத்தில் வாழ்ந்த அருணகிரிநாத சுவாமிகள் (1450) இவ்வூரை, 'கடலக் கரைதிரை அருகே சூழ் மயிலைப்பதி' என்கின்ருர். பிறகு 1514-ல் இந் நகர் போர்த்துகீசியர் என்ற பறங்கியர் கைக்கு வந்தது. அதுவரை கோயில் கடற்கரையில் இருந்தது. அவர்களோ பிற சமயத்தார்களுடைய சின்னங்களை அழிப்பதே தொழில். இலங்கையில் திருக்கோணமலை, திருக்கேதீச்சரம், துளுவநாட்டில் கோவா முதலிய தலங்களில் இருந்த கோயில்களை அழித்துக் கிறிஸ்துவப் பள்ளிகளாகக் கட்டினதுபோல இங்கும் இருந்த பண்டைக் கோயிலை இடித்து அதன் கற்களைக் கொண்டு 'செந்தோம்' ஆலயத்தைக் கட்டினுர்களாம். சமீபத்தில் அங்கே பழுது பார்க்கையில் பல பண்டைச் சின்னங்கள் கிடைத்தனவாம். மூன்று நூற்ருண்டுகளுக்கு முன் இப்போதுள்ள ஆலயம் கட்டப்பட்டுள்ளது. பழைய கற்களையும் புதுக் கற்களையும் கொண்டு கட்டினுர்களாம். அப்படிக் கட்டினதில் பல கல்வெட்டுக் கற்கள் தாறுமாருய்ப் போயின. பல கல்லறைக் கற்களும் அதில் சேர்ந்து விட்டன. 1672-ல் மூர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் சண்டை நடந்தது. அப்போது பிரஞ்சுச் சேனை இந்த ஆலயத்தில் புகுந்து கொண்டதாம். இந்த ஆலயத்துத் தள வரிசை ஒன்றில் 1646-ம் ஆண்டுக் குறிப்பு ஒன்று இருக்கிறது. 1798-ல் வரையப்பட்ட சென்னைப் படம் ஒன்றில் இப்போதுள்ள குளம் குறிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அக்குளம் அதற்கு முந்தியே இருந்திருக்க வேண்டும். கோயிலின் கீழே கோபுரம் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பும் திருக்குளத்தின் படியமைப்பு, சுமார் 50 ஆண்டுகளின் போதும் கட்டப் பட்டனவாம்.

7. நூல்கள்:—இந்தத் தலத்தைப் பற்றித் தேவாரப் பதிகத்தைத் தவிர வடமொழியில் ஒரு புராணமும் தமிழ் மொழியில் இரண்டு புராணங்களும் பல பிரபந்தங்களும் உண்டு. வடமொழிப்புராணம் 11 அத்தியாயங்கள் கொண்ட கபாலீஸ்வர ஸ்தல மகாத்மியம் என்ற நூலாகும். அது கலியுகத்தில் 5022 (கி. பி. 1920) அச்சடிக்கப் பட்டது. தமிழில் குன்றக்குடி திருவண்ணமலை ஆதீனத்து மயிலைக்கிளை மடத்தில் இருந்த அமிர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய தவ புராணம் ஆகும். அது கலியுகம் 4995 (கி. பி. 1894) மகா வித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் இயற்றிய உரையோடு அச்சடிக்கப் பட்டது. மயிலை வாசியான புராணிகர் நாதமுனி முதலியார் மற்றொரு புராணம் பாடியிருக்கின்றார். அதில் 806 செய்யுட்கள் உண்டு. பிரபந்தங்களில் மயிலைத் திருவந்தாதி ஒன்று.

---

3. சமயப் பகுதி

உலகம் எல்லாம்

(அ. அருளம்பலம், யாழ்ப்பாணம்)

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்பது கச்சியப்பர் வாக்கு. சைவநீதியாவது யாது? கடவுள் ஒன்று உண்டென்று உணர்ந்து மனிதன் இறைவனுக்கும் அவனால் தோற்றுவிக்கப்பெற்ற சகல ஆன்மாக்களுக்கும் அன்பாகப் பணிசெய்வது சைவநீதி என்று சுருங்கக் கூறலாம். இதனாலன்றோ திருநாவுக்கரசு சுவாமிகள் "தன்கடன் அடியேனையும் தாங்குதல் என்கடன் பணி செய்து கிடப்பதே" என்று திருவாய் மலர்ந்தார். கடவுளின் தன்மையை விளக்கவந்த திருமூலநாயனார் அன்பும் சிவமும் ஒன்றென்று வற்புறுத்துகின்றார். ஆகவே எங்கும் நிறைந்த அன்புருவாகிய இறைவனை நாம் எல்லா உயிரிடத்தும் அன்பு மார்க்கமாகக் காணவேண்டும். இது சைவ சமயத்தின் மேன்மையாகிய நீதியாகும்.

இப்படிப்பட்ட உயர்ந்த சைவநீதிக்குப் பதிலாக இன்று நாம் உலகத்தில் என்ன காண்கிறோம்? சுயநலமும்,

லோகாயதமும், அழுக்காறு, அவா முதலியனவும் இன்றைய உலகில் அதிகமாகப் பரவியிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் சைவநீதிக்கு இடமில்லைபோல் காணப்படுகின்றது. சைவசமயம் தொன்று தொட்டு வாழ்ந்த நாடுகளில்கூட சைவநீதி அருகி வருகின்றது. கற்றவர்கள் என்று கூறப்படுபவர்களிடத்திலும் அதிகமாக சமயத்தின் பரப்பு புத்தக அறிவோடு மாத்திரம் நின்றுவிடுகின்றது. சமயத்தைச் சாதனை செய்கின்றவர்கள் சிலரேயாகின்றனர். சமயம் கற்கவேண்டிய காரியம் மாத்திரமல்ல ; அது வாழவேண்டிய ஒரு விசேஷ மார்க்கம். போதனையிலும் சிறந்தது சாதனை. இதனால்தான் தெய்வப்புலமைத் திருவள்ளுவர்,

> "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக"

என்று வற்புறுத்திக் கூறுகின்றார்.

உலகத்தில் உண்மையாகப் பெரியோர் என்று கூறப்படுபவரெல்லாம் படிப்பாலும் செல்வத்தாலும் அதிகாரத்தாலும், உயர்ந்தவர் அல்ல, உண்மையான பெரியோர் நடு நிலைமையில், அறநெறியில் மேம்பட்டவர்கள். அவர்கள் செந்தண்மை போன்று ஒழுகுபவர். இப்பேர்ப்பட்டவரைத்தான் எமதுபொய்யா மொழிப் புலவர் அந்தணர் என்று அழைக்கின்றார்.

> "அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
> செந்தண்மை பூண்டொழுக லான்"

இப்படிப்பட்ட பெரியோர்கள்தான் பன்னிரு திருமுறைகளையும் பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களையும் இயற்றியவர்கள். இவற்றின் பெருமை இன்று மங்கிக் கிடக்கின்றது. நமது நாட்டிற்கூட இவற்றை அறிந்தவர் சிலரே. அறிந்தும்கூட கற்றவா றொழுகுபவர் சிலரினும் சிலரே. மேலைத் தேசங்களைப் பற்றிப் பேசத் தேவையேயில்லை. அங்குள்ளார்கள் சைவ சமயமென்றால் ஏதோ அர்த்தமற்ற டாம்பீகமான நீண்ட சடங்குகள் அமைந்த ஒரு மார்க்கம் என்று கருதி வருகின்றார்கள். ஏன் நமது நாட்டிலும்கூட சாதாரண மக்கள் எமது சமயத்தை அவ்வாறே கருதுகின்றார்கள். இப்படிப்பபட்ட கருத்துக்கள்

மக்களிடையே பெரும்பாலும் பரவுவதற்குக் காரணம் கோவில்களையும், மடங்களையும், சைவ ஸ்தாபனங்களையும் நடாத்துபவர்கள் சடங்குகளை மாத்திரம் விசேடமாகக் கவனித்து ஞானமார்க்கத்தை மக்களிடையே பரவச்செய்யாமையேயாம். சைவ சமயக் கிரிகைகள் வேண்டாமென்று நான் கூறவரவில்லை. அவைகள் வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளுகின்றோம். ஆனால் சடங்குகள் மாத்திரம் போதா. கிரிகைகள் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுக் கவ்வளவு ஞான வளர்ச்சியும் அத்தியாவசியம். ஞான வளர்ச்சி நன்றாக இருந்தால்தான் நாம் இறுதியாக விரும்பும் மௌனநிலை நமக்குக் கிட்டும்.

சென்ற ஆண்டு நான் ஐரோப்பாவிற்குச் சென்றிருந்தேன். எனது தாவர உணவு அங்குள்ள நண்பர்களின் கவனத்திற்காயிற்று. ஆகவே அவர்கள் எனது சமயத்தைப் பற்றி விசாரித்தார்கள். மேல்நாட்டிலுள்ள பெரும்பகுதியினருக்குச் சைவ சமயத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாது. மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந்தர் முதலிய பெரியார்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறார்கள். படித்தவரிற் சிலரினும் சிலர் அவர்களுடைய நூல்களை வாசித்திருக்கின்றார்கள். ஆனால் சைவ சமயத்தைப் பற்றி அறிந்தவர்கள் கைவிரலில் எண்ணத்தக்க ஒரு சிலரேயாவர். திருவாசகத்தின் மாண்பினை சிலருக்கு எடுத்துக்கூறிப் போப்பையருடைய மொழிபெயர்ப்பை அவர்களுக்கு வாசித்துக் காட்டியபோதும் திருக்குறளின் உயர்ந்த கருத்துக்களையும் அதன் ஆங்கில மொழி பெயர்ப்பை அவருக்கு காட்டிய போதும் அவர்கள் ஆவலோடு கேட்டது மாத்திரமல்லாமல் இப்படிப்பட்ட நூல்களைத் தாம் படிக்க விருப்பமுற்றவர் என்பதை அறிவித்தார்கள். ஜெர்மன் தேசத்திலுள்ள பேராசிரியர் ஒருவர் தான் திருக்குறளின் மொழி பெயர்ப்பைப் படித்துத் தனது வாழ்க்கையைப் புனிதமாக மாற்றிக் கொள்ள அந்நூல் உதவியிருக்கிறது என்று அண்மையில் எனக்கு எழுதியிருக்கின்றார். ஆனால் எமது அரிய நூல்கள் மேல்நாட்டில் உள்ளவர்களுக்கு எவ்வாறு பயன் கொடுக்கும்?

சைவநீதி உலகமெல்லாம் பரவ வேண்டுமானால் முதலாவதாக எமது தேவார திருவாசகங்களும் சைவ சாஸ்

திரங்களும் பல பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு ஆங்காங்கே இலவசமாகவோ, சொற்ப விலைக்கோ வழங்கப் படவேண்டும். எமது புலமை உண்மையாகத் திறமை யுடைத்தது. ஆனால் அதற்கு வெளிநாட்டார் வணக்கம் செய்வார்கள். மேல்நாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள் தமிழ் மொழியில் ஆக்கப்படவேண்டியது எவ்வளவுக் கெவ் வளவு அவசியமோ அவ்வளவுக் கவ்வளவு உலகத்தின் உய் வுக்காகத் தமிழ்மொழியில் உள்ள உயர்ந்த கருத்துக்களும் சைவநீதி சாத்திரங்களும் பல தேசத்து மொழிகளில் இயற்றப்படவேண்டும்.

இரண்டாவதாக சைவ சங்கங்கள் மேல்நாடுகளிலும் ஸ்தாபிக்கப்படவேண்டும். நமது நாட்டில் எவ்வளவு கிறிஸ் தவ சங்கங்களும் ஆலயங்களும் இருக்கின்றன. மேல்நாட் டில் எமது சமய ஸ்தாபனங்கள் ஏதாவது உண்டா? நாம் "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்" என்று கூறிவிட்டுச் சும்மாயிருப்பது எவ்வளவு மடமை. நாம் பழமை பேசுவதில் மாத்திரம் மகிமையில்லை.

இந்த உயர்ந்த சேவை செய்ய யார் முன் வருவார்? சைவாதீனங்கள் இந்தத் துறையில் ஏதாவது செய்ய முடி யுமா? சைவ ஸ்தாபனங்கள் உதவி புரிவார்களா? உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளை பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனை, தென் னாடுடைய சிவனை எந்நாட்டவரும் அறிந்து ஆனந்தித்து அமர வாழ்வு வாழ சைவ சமூகம் ஒருமித்து எழவேண்டும். வாழ்க சைவநீதி! பொலிக சைவமார்க்கம்!

"*காகமுறவு கலந்துண்ணக் கண்டீ ரகண்டா காரசிவ*
போகமெனும் பேரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமா
யேகவுருவாய்க் கிடக்குதையோ வின்புற்றிட நாமினியெடுத்த
தேகம்விழுமுன் புசிப்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே."

---

4. சாத்திரப்பகுதி

சிவப்பிரகாச மூலமும் உரையும்

(சித்தாந்த ரத்நாகரம் - முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், ஆரணி)

(மலர் 24 ; இதழ் 10 ; பக்கம் 423-ன் தொடர்ச்சி)

சத்தசத்தறிவது சதசத்து எனல் :—

(ருஎ) சத்திது வென்ற சத்துத்
தானறி யாத சத்தைச்
சத்தறிந் தகல வேண்டா
வசத்திது சத்தி தென்றோர்
சத்திரு ளொளிய லாக்கண்
டன்மைய தாம சத்தைச்
சத்தி னின்று நீங்குந்
தன்மையாற் சதசத் தாமே

என்பது. இது சத்து என்று (அசேதனமான) அசத்து அறியாது. சத்து அசத்தை அறிந்து நீங்க வேண்டா. இஃது அசத்து இது சத்து என்று ஒருஞ் சத்து, இஃது இருள் இஃது ஒளி என்று ஒருங்கண் அவ்விருளொளியின் வேறுதல் போல் அச்சத்தசத்துக்களின் வேறுந்தன்மைய தாம். அது சத்துடன் கூடி நின்று அசத்தை நீக்குந் தன்மையுடைய காரணத்தால், 'சதசத்து' என்று குறிக் கப்படுவது என்பதாம்.

அசத்து அசேதனம் (சடம்) ஆதலின், சத்தையறி யாது. இயல்பாகவே பாசங்களில்லாதவனாதலின், சத்து (பதி) அசத்தை(ப்பாசத்தை)யறிந்து நீங்க வேண்டா. கண் இருளையும் ஒளியையும் பகுத்துணர்ந்து, ஒளியுடன் கூடி நின்று இருளை நீங்குதல் போன்று, சதசத்து (ஆன்மா) அசத்தையும் சத்தையும் பகுத்துணர்ந்து, சத்துடன் கூடி நின்று அசத்தை நீங்குதலுடையது.

பாசம் பதியையறியாது. பதி பாசத்தை யறிந்து நீங் கிப் பதித்துவம் அடைந்ததெனில் இயல்பாகாது செயற்கை யாய்ப் பதிக்குத் தலைமையின்றாகும். ஆதலின், அறிந்

தகல்வது வேண்டாததே. அறிதற்கும் அகறற்கும் ஒரு பயனுமில்லை. பாசத்தையும் பதியையும் அறிய நிற்பது பசுவே என்பது பாரிசேடத்தாற் பெறப்படும். இதனைக் கண்ணியல்பாம் உவமத்தால் இனிதுணர்க.

ஒளியை இருளறியாது. ஒளியே இருளை யறிந்து அகன்று ஒளிர்தலை யடைந்ததென்றல் பொருந்தாது. அறிதற்கும் அகறற்கும் பயன் ஒன்றுமில்லை. இருளையும் ஒளியை அறிய நிற்பது கண் என்பது பெற்றும். அதுபோலச், சத்தை அசத்தறியாது. சத்து அசத்தை யறிந்து அகன்று சத்தாந் தன்மையை யடைந்த தென்றல் பொருந்தாது. இஃது அசத்து என்றும் இது சத்து என்றும் ஓர்தற்குரியது சதசத்து. அச்சதசத்தே (ஒளியுடன் நின்று இருளினீங்கும் கண் போலச்) சத்துடனின்று அசத்தினீங்கும் என்க. சிவஞானபாடியம் ௬, எ, ௧ சூத்திரவுரைகளிலுள்ளவற்றையும் உணர்க.

இஃது ஈசன் அசேதனத்தளித்திடாமை யுணர்த்துவது :—

(ருஅ) கண்ணொளி விளக்க ளித்துக்
காட்டிடு மேன்னின் முன்னங்
கண்ணொளி யொன்று மின்றும்
விளக்கொளி கலந்த வற்றைக்
கண்ணொளி யகல நின்றே
கண்டிடும் வேறு காணக்
கண்ணொளி விளக்கின் சோதி
கலந்திடுங் கருத்தோன் றன்றே

என்பது. விளக்கே கண்ணுக் கொளியைக் கொடுத்துக் காட்டுமெனில், அது காட்டுமுன் கண்ணுக்கொளி சிறிதுமில்லையாம். விளக்கொளி கலந்த பொருள்களைக் கண்ணொளி அதனொடும் (அணுகி நில்லாமல்) அகன்று (இருளிடத்து) நின்றும் கண்டிடும். (அதனால், கண்ணுக்கு இயல்பாகக் காணுமாற்றலுண்டு என்பது கொள்ளப்படும். கண் இருளில் நின்று ஒளியோடு கலந்தவற்றைக் கண்டதேனும் விளக்கொளியுடன் கூடாமல் அவ்வொளி கலந்த பொருள்களை வேருக நின்று காணுமாற்றல் கண்ணொளிக்

இல்லை. அவ்வாறு) வேறு காணுக் கண்ணொளியும் விளக்கொளியும் ஒன்று கூடிப் பார்வையுண்டாயினும் கருத்து வேறுபாடுண்டு. ஒன்றன்று என்பதாம்.

மேல் (ருச) 'எல்லாம் அறிபவன் அறியுந்தன்மை யருளுவன் என்னில் ஆன்மா அறிவிலதாகும். ஈசன் அசேதனத் தளித்திடான்' என்றும், (ருரு) 'அறிவினாலறியும்' என்றும், (ருஎ) 'அசத்தைச் சத்துடன் நின்று நீக்குந் தன்மையாற் சதசத்தாம்' என்றும் உணர்த்தியவற்றை இதனால் விளக்கியருளினார். கண்ணுக்குத் தனக்கென ஒளியுண்டென்றதால் உயிர்க்குத் தனக்கென அறிவுண்டென்றும், கண் ஒளியையும் இருளையும் அடைதற்குத் தக்கதாதல் போல உயிர் சிவத்தையும் மும்மலத்தையும் அடைதற்குத் தக்கதா மென்றும். விளக்கொளி யுதவியின்றிக் கண் காணாதது போலத் திருவருளுதவியின்றி உயிர் அறியாது என்றும், கண்ணொளி விளக்கொளியொடு கலந்து இருளையகலுமாறு போல உயிர் சிவத்தொடு கலந்து மலத்தையகலும் (சத்துடனின்று அசத்தை நீங்கும்) என்றும் அறிவித்தவாறு காண்க.

உயிரைப்பற்றிய பரமதமும் சுவமதமும் உணர்த்துவது :—

(ருகூ) ஓரிடத் திருத்தல் மாயா
வுருநிறைந் திடுதே லொன்றும்
பேரிடத் துறைத ரூனே
பிறங்கறி வாகி நிற்றல்
சோர்வுடைச் சடநி கழ்த்த
லேனுமிவை சோல்லார் நல்லோ
ரோரிடத் துணரு முண்மைக்
கோளிதரு முபலம் போலும்

என்பது. உடம்பில் ஓரிடத்திலிருந் தறிதல், மாயா காரியமான (அவ்)வுடம்பெங்கும் நிறைந்தறிதல், எங்கணும் வியாபகமாய் நிறைந்து நின்றறிதல், தானே பிரகாச ஞான மாத்திரமாய் நிற்றல், அசித்தாகிய மனாதி கருவிகளைக் கொண்டு அவை கொடுக்கும் அறிவாலறிதல் எனப்பரமத்தர் உயிரைப்பற்றிக் கூறுமிக் கொள்கைகளை நல்லோ

ராகிய சைவசித்தாந்த ஞானியர் சொல்லார். உயிர் உணரு மாற்றை ஒருமிடத்து, ஒளியைத் தரும் படிகத்தினியல்பு போலச் சார்ந்ததன் வண்ணமாம் என்பதாம்.

1. மிருதி நூலாளர், உயிர் உடம்பினுள் இதயத்தில் புன்னுனிப் பனித்துளிபோலிருந்தறியு மென்பர். அது பொருந்தாது: உடம்பெங்கு முற்றறிவது (பரிசத்தையறிவது) இல்லையென்றுகும். அவ்வியாபகம் வியாபித்தறியு மெனப்படுங் குற்றந்தங்கும். ஓரிடத்திருப்பது உருவும் சடமும் அழிவும் உடையதாதலின், அவ்வியல்பில்லாத உயிர்க்கு அவையுளவெனப்படும் விபரீதமுண்டாகும்.

2. சமணர், உயிர் உடம்பினளவு நிறைந்து நின்றறியு மென்பர். அவத்தைப் படுதல், உடல் வளர வளர்ந்து சிறுகச் சிறுகுதலாகிய 'சங்கோச விகாசதன்மம்' பொறிகளைந்தும் புலன்களை யொருகாலத்திலே நுகராமை, உடல் வளர வளர்ந்து சிறுகச் சிறுகுதலாகிய உறுப்புக் குறைவால் உயிரும் சின்னபின்னப்படுதல், யானையுடம்பிற்கேற்ப அறிவு பெருகுதல் எறும்பினுடம்பிற் கேற்பச் சிறுகுதல், உடலைக் குறைப்ப உயிர் குறைதல் முதலிய பல குற்றமுறுத லால் அக் கொள்கையும் பொருந்ாது.

3. ஐக்கியவாதிகூற்று :—உயிர் முதல்வனைப் போல எங்கும் வியாபியாய் நின்றறியும் என்பது. உயிர் ஐந்தவத்தையுறுதலாலும், பிறப்பிறப்பாகிய போக்குவரவுடைமையாலும் பொறிவாயிலைந்து புலன்களையும் ஒன்றென்றுக அறிவதன்றி ஒரு காலத்தில் ஒருங்கே யறியாமையாலும் அது பொருந்தாது.

4. (அ) சாங்கியர், உயிர் குணியன்று, குணம். அறிவு மாத்திரமாய் நிற்பது. அவ்வுயிரின் சந்நிதியின் உடம்பின் கண் நின்று கரணங்கள் தொழிற்படும். அதனால் இச்சா ஞானக் கிரியைகள் நிகழும் என்பர். (சிவஞான சித்தியார், பரபக்கம் உ௬௦.) பிணத்தும் உறக்கத்தும் உயிரின் சந்நிதிக்குக் கேடில்லாதிருக்கவும் உடம்பின் கண் அவை நிகழாமையின் அது பொருந்தாது. (ஆ) சிவசமவாத சைவரும் ஈசுவர அவிகாரவாத சைவரும் ஐக்கவாத சைவரும் உயிர் தானே அறியும் ஒருவர் அறிவிக்க வேண்டுவதில்லை என்பர். உயிர்

அந்தக்கரணங்களையும் பஞ்சேந்திரியங்களையுங் கொண்டு சத்தாதி விஷயங்களை அறிதலால் அதுவும் பொருந்தாது.

5. வைசேடிகர், உயிர் அறிவில்லாதது. அதற்கு மனுதியாகிய கருவிகள் அறிவை விளக்கும் என்பர். அறிவித்தாலறியும் உயிர் சித்து. மனுதிகள் சடம். சடம் சித்தாதலில்லை. உயிரும் மனுதியும் சடமாயின் ஒன்றற்கொன்று அறிவுண்டாக்குதல் பொருந்தாது.

உயிர்க்குள்ள இயல்புகள் :—

1. அறிவித்தாலறிவது.
2. சத்தையும் அசத்தையுமறிவது.
3. சார்ந்ததன் வண்ணமாய் நின்றறிவது.

இது காறும் (௫௨) உயிரின் பொதுவியல்பும் (௫௩+௫௪) உயிர்க்கு அறிவுண்டென்பது பற்றிய ஆராய்ச்சியும் (௫௫) உயிரறிவாலறியப்படும் பொருளும் அறியப்படாப் பொருளும் (௫௬+௫௭) சத்து அசத்து சதசத்து என்னும் மூன்றனுள், சதசத்தாகிய உயிரே ஏனையிரண்டனையு மறிதற்குரியது என்பது பற்றிய ஆராய்ச்சியும் (௫௮) அதற்குவமையும் (௫௯) உயிரைப் பற்றிய பரமதமும் சைவ சித்தாந்திகள் அப்பரமதங்களை யிசையாமையும் அவ்வுயிரின் இயல்பும் அதற்குவமையும் இனிதுணர்த்தி உண்மையின் முதற்பிரிவாய் 'ஆன்மா' என்பது இற்றென விளக்கப்பட்டது. மேல் 'அஞ்சவத்தை' விளக்கப்படும்.

௨. அஞ்சவத்தை

(௬௦) எண்ணவோன் றிலாத தீத
மேய்திய துரியத் தோன்று
நண்ணிடுஞ் சுழுத்தி தன்னி
னயந்துள தோன்று பின்னு
மண்ணிடுங் கனவு தன்னி
லாறேழாஞ் சாக்கி ரத்தின்
கண்ணுறு மஞ்சா ரூய
கருவிகள் மருவுந் தானே.

என்பது. [1]துரியாதீதம், [2]துரியம், [3]சுழுத்தி, [4]கனவு, [5]நனவு

என்று அதீதம் முதலாகக் கொண்டு அவற்றின் நிற்கும் கருவிகளின் தொகையை நோக்கின், முறையே 1. புருடனொருவன் உண்மை, வேறு கருவியின்மை 2. பிராணவாயுவான ஒருகருவி, 3. அதனோடு சித்தம் சேர இரண்டு, 4. அவற்றோடு சத்தாதி வசனாதி அந்தக்கரணம் ஆகிய பதின்மூன்று. பிராணவாயு வல்லாத வாயுக்கள் ஒன்பது. 5. அவற்றொடு ஞானேந்திரியங்களும் கருமேந்திரியங்களுமாகிய பத்தும் அப்புருடனைச் சார்ந்து நின்று தொழிற்படும் என்பதாம்.

சாக்கிரம் நுதலிலும், சொப்பனம் கண்டத்திலும், சுழுத்தி இதயத்திலும், துரியம் நாபியிலும், துரியாதீதம் மூலாதாரத்திலும் முறையே முப்பத்தைந்தும் இருபத்தைந்தும் மூன்றும் இரண்டும் ஒன்றுமாகிய கருவிகளின் தொழிற்பாடுடன் நிகழும் அவத்தைகளாம். சொப்பனத்தில் தசவாயுக்களும் சத்தாதி வசனாதிபத்தும் மனாதிநான்கும் பிரகிருதியுமாகிய இருபத்தைந்து கருவிகளுள. அவற்றுள், சுழுத்திக் குரியவாகி ஆண்டுச் செல்லும் பிரகிருதி, பிராணவாயு, சித்தம் மூன்றும் நீங்க நின்ற இருபத்திரண்டுமே இத்திருவிருத்தத்துள் உணர்த்தப்பட்டமையால், 'ஐயைந்தாங் கண்டத்து' என்றும், 'கனவுதன்னிலாக்கிய விருபத்தைந்து களத்தினில்' என்றும் உணர்த்தும் முன்னூற்றொகையோடு வேறுபட்டதாகக் கொள்ளற்க.

இது காரிய கேவலாவத்தையை யுணர்த்திற்று. சகலத்திற் கேவலம் என்றும் கீழாலவத்தை என்றும் குறிக்கப்படும்.

அஞ்சாறுய கருவிகள் என்பதற்குள்ள வுரைகளாவன :—

1. மதுரைச் சிவப்பிரகாசர் :—பூதங்கள் ஐந்தின் வழித்தாகிய கருவிகள்.

2. காஞ்சிபுரம் இலக்கணம் சிதம்பரநாத முனிவர் :—ஞானேந்திரியமைந்தும் அதன் வழி எண்ணுவதாய கன்மேந்திரியங்களைந்தும் ஆகிய கருவிகள்.

3. சிந்தனையுரையாசிரியர் :—பஞ்சபூதத்தின் வழித்தாய்ச் செயற்படுமிருவகை யிந்திரியம் பத்தும்.

4. திருவுருவமாமலைச் சாரலடிகள் :— ஷை

5. திருவிளங்கம் அவர்கள் :—அஞ்சு என்னும் நெறியாய் வந்த கருவிகள்.

'பூதமிடமாய்ப் பொருந்தும் பொறி' என்பது முதலியவற்றை நோக்கிப் பொருந்துமாறு கொள்க.

---

5. கலைப்பகுதி

தவம்

(அழகுமதியன்)

நடுப்பகலிலே கடுவெய்யிலிலே நகரத்தெருவிலே கையில் மஞ்சள் துணிகட்டிய உண்டியற் செம்பு ஒன்று பிடித்துக் கொண்டு அங்கப்பிரதட்சணம் அல்லது உருள்தண்டம் போட்டுக்கொண்டு ஒருவன் செல்லுகிறான். அவ்வாறு உருளும்போது 'ஏழுமலையானே கோவிந்தம்' முதலிய பல திருநாமங்களை உரக்க உச்சரித்துக்கொண்டு போகிறான். அந்த ஒலியைக்கேட்ட இல்லறத்தார்கள் உடனே வெளியே வந்து அந்த உண்டிகையில் காசுகளைப்போட்டுவிட்டு வணக்கம் சொல்லிவிட்டுச் செல்லுகிறார்கள். அவன் உருளும் போது படும் துன்பம் பரிதவிக்கத்தக்கது. அவன் உருவமும் இரங்குதற்கு உரியது. தலையில் முகத்தில் மயிரும் தாடியும் வளர்ந்து அழுக்குப்பட்டிருக்கும். உடல் தெருத் தூசிபட்டு நொந்துகிடக்கும். கத்திக்கொண்டு செல்வதினால் நாவரண்டு தொண்டை கம்மியிருக்கும். இந்தப் பரிதாபமான நிலையைக் கண்டால் எந்த நெஞ்சுதான் இளகாதோ? படித்த நாகரீகமக்களும் இந்த நிலைகளைக் கண்டு சகிக்காதவர்களாகித் துட்டுத்தருவார்கள். இத்தனை வருந்தி கோரிக்கை முடிக்கும் ஒருவனுடைய மனோநிலை எத்தனை பக்குவம் அடைந்ததோ என்று வியப்பும் உறக்கூடும்.

அவ்வாறு உருள்தண்டம் பிடிக்கும் ஒரு அன்பனைப் பின்பற்றிச் செல்வோம். நெருங்கிய வீடுகள் தாண்டினவுடனே ஒரு சாயாக்கடை வந்தது. அந்த இடம் அண்டினவுடனே அந்த அன்பன் எழுந்தான். கடையின் முன்னால் நின்றான். கடைக்காரனைச் சிறிது தாகத்திற்குக் கேட்டான். அவன் ஒரு மலையாளத்தான். இந்தத் தத்துவத்

தில் அவனுக்கு நம்பிக்கை இருக்கவில்லை. சும்மா கொடுக்க மறுத்துவிட்டான். அன்பனே மெல்ல மறைவாகத் தன் உண்டிகையிலிருந்து சில துட்டுக்களை எடுத்துக் கடைக்காரனிடம் கொடுத்தான். உடனே தின்பண்டங்களும் சாயாவும் கிடைத்தன. உண்டுப் பருகிவிட்டுச் சிறிதுநேரம் அந்த அன்பன் ஒருமர நிழலில் இளைப்பாறினான். பிறகு எழுந்து மீண்டும் வீடுகள் நெருக்கமாக இருந்த தெருப்பக்கம் சென்று படுத்துக்கொண்டு உருளத் தொடங்கினான். உரக்கக்கோவிந்தம் போட்டுக்கொண்டு சென்றான். அதனைக் கண்ட இல்லறத்து மங்கைமார்கள் துட்டுக்களை அளித்தார்கள். இவ்வாறு நகரங்களில் நடப்பதை நாடோறும் பார்க்கிறோம். இந்த உண்டியல் பணம் திருமலைப் பெரிய உண்டியலில் விழுகிறதா என்றது ஒருகேள்வி? அதைப்பற்றி எவரும் சிந்திக்கிறதே இல்லை அல்லவா?

சில ஏழைகள் குழந்தைகளைக் கையில் ஏந்திக்கொண்டு உருளுவார்கள். அப்போது ஆடவன் உருள்தண்டம் பிடிக்கப் பெண்பிள்ளை அருகில் நடந்துகொண்டு குழந்தையின் பேரில் வெய்யில் விழாதபடி குடைபிடித்துக்கொண்டு போவாள். ஆடவன் சிலவசனங்களைக் கூற பெண்பிள்ளை கோவிந்தம் போடுவாள். இவ்வாறு செய்வது குழந்தை இல்லாமல் வெகுகாலம் இருந்து பிறகு கோரிக்கைக் கொண்ட பின்னர் குழந்தை உண்டாக அதன்பொருட்டு இயற்றும் பிரார்த்தனைச் செயலாம். சில விழாக்களில் நெருப்புச்சட்டிகளை ஏந்திக்கொண்டு உருள்தண்டம் பிடிப்பதும் உண்டு. இவர்களில் பெரும்பான்மையோர் உண்மையான நம்பிக்கைக் கொண்டு செய்வதும் உண்டு. பலபேர் வயிற்றுப் பாட்டிற்காகச் செய்வதும் உண்டு. திருமலையிலேயே ஆகாசகங்கைக்குப் போகும் வழியில் படிகளின் மீது அமர்ந்திருக்கும் ஆட்களைச் சற்று ஆராயுங்கள். அலகு ஏற்றிக்கொண்டு தவம் புரிவதாகப் பாசாங்கு செய்யும் ஆட்களே மிகுதி. இல்லாவிடின் ஏன் இவர்கள் காசுக்கு ஆசைப்படவேண்டும்? தெரியாதபடி மறைவில் நின்று பார்த்தால் இவர்கள் குணங்கள் எளிதில் தெரியும். இவர்கள் போலித் தவத்தார் எனலாம் அல்லவா?

அதே திருப்பதித் திருமலையிலே சனிக்கிழமைகளிலே பலபேர் உருள்தண்டம் பிடிப்பதுண்டு. தெருவில் பிடிப்

பவர்கள்தான் காசுக்கு ஆசைப்படுவார்கள். ஆலயப்பிரகாரத்துக்குள் உருளுகிறவர்கள் காசுக்கு ஆசைப்படாதவர்கள். கோரிக்கை முன்னிட்டே உருளுவார்கள். படித்தவர்களும் பணக்காரர்களும் உருள்தண்டம் பிடிப்பதுண்டாம். அதிலும் பெண்மணிகள் உருள்தண்டம் பிடிப்பது வியப்பாகத் தோன்றவில்லையா? நடுவயதுள்ள ஒருமாது பட்டுச்சேலை அழகாக உடுத்திக்கொண்டு நிரம்ப நகைகள் அணிந்துகொண்டு திருப்பதி ஆலயத்தின் உட்பிரகாரத்தில் உருண்டு சென்றாள். களைப்பால் அடிக்கடி படுத்தபடியே இளைப்பாறுவாள். கணவன் படித்தவன். அருகில் நின்றுகொண்டு வழி காட்டுவான். மயக்கத்தால் கோணலாகப் போனால் அவன் சரியான வழிகாட்டுவான். இவ்வாறு உருள்தண்டம் மூன்று தடவை போட்டாள். அந்தத் தம்பதிகளுக்கு அதில் நம்பிக்கை இல்லாமலேயா இப்படிச் சிரமப்பட்டார்கள்? துளுவநாட்டுச் சுப்பிரமணியத்தில் பக்தர்கள் உணவு உண்டு, மிஞ்சின எச்சில் இலையில் மக்கள் உருள்தண்டம்போடுவதுஅசூசியாகத் தோன்றவில்லையா? விடியலின் முன்னர் ஒரு கல் அளவு கரடு முரடானபாதையில் அங்கே உருள் தண்டம் போடுவதும் உண்டு. இவைகளின் பொருள் என்ன?

தமிழ்நாட்டில் மட்டுமா இவ்விதச் செயல்கள் நடைபெறுகின்றன? வேறு நாடுகளிலும் உண்டு. வடநாட்டில் இவ்விதச் செயல்கள் மிகவும் உண்டு. சிறப்பாகப் புனித க்ஷேத்திரங்களில் புனித ஆற்றங்கரையில் இவைகளை மிகவும் காணலாம். உடலை வருத்திப் பேரின்பம் காண வேண்டும் என்ற அவாவினால் அவைகள் செய்யப்படுகின்றனவாம். இசுலாமிய நாடுகளில் பாரசீகத்தில் மாரடித்தல் என்ற கடுமையான பழக்கம் உண்டு. ஆப்பிரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் கணக்கற்ற கொடிய பழக்கங்கள் உண்டு. அவைகளைப்பற்றி இங்கு ஆராயவேண்டியதில்லை.ஏனெனில் அம்மக்களைக் காட்டுமிராண்டிகள் என்று ஒதுக்கி வைத்திருக்கிறோம். இந்தியாவிலிருந்து இலங்கை, மோரிசு, நேட்டால், பீஜி இவைகளுக்குக் குடியேறியிருக்கும் இந்தியர்களும் அங்கே நெருப்பு மிதித்தல், அலகுகுத்துதல் முதலிய கொடிய பழக்கங்களைக் கொண்டு சென்று நடவடிக்கைகளில் கையாண்டு வருகிறார்கள். அவர்களை வெள்

ளையர்கள் அநாகரீகக் கூட்டத்திலேயே வைத்திருக்கிறார்கள். அதில் வியப்பு இல்லை. இந்தியாவிலிருந்து உயர்ந்த சமயக் கொள்கைகளை அவர்கள் எடுத்துச் செல்லவில்லை. ஆனால் நாகரீகர் என்று கூறும் வெள்ளை கிறிஸ்தவர்களில் இப்பழக்கம் இல்லையா என்று கேட்கலாம்? ஸ்பெயின் நாட்டின் தவம் என்ற முறையில் பல கொடிய பழக்கங்கள் நாளது தேதியிலும் நடைபெறுகின்றன. விழாக்களிலே கிறிஸ்தவப் பள்ளிகளின் முன்னிலையில் மக்கள் இரத்தம் சிந்துவதும் வழக்கமாம். இதற்கு என்ன கூறுவார்கள்?

நம்பிக்கை என்ற ஒரு சொல்லே இதற்கு விடை. இது எங்கும் கூறப்படும். இந்த நம்பிக்கை இருவகைப்படும். அது அறிவுக்குத்தக்கபடி இருக்கும். மெய்ந்நம்பிக்கை மூட நம்பிக்கை என இருவகைப்படும். பகுத்தறிவு அல்லது விவேகத்தை அடிப்படையாகக்கொண்ட நம்பிக்கை மெய்ந் நம்பிக்கை; ஒரு சுயநலம் கருதி உடலை வருத்துதல் மூட நம்பிக்கை. சுயநலமில்லாமல் பொதுநலம் கருதித் தவம் இயற்றுதல் அது அல்ல. தானே ஏற்பட்ட வருத்தத்தைச் சகித்துக்கொள்ளுதல் தவம் ஆகும். இதனைத் திருவள்ளுவர்

‘உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு’

என்றார். ஆகவே, உடலைவருத்தி அதனைச் சகித்தல் தவம் அல்ல. அதிலும் சுயநலம் இருந்தால், ஒரு விருப்பம் இருந்தால், அது தவம் அல்ல. அதில் கொள்ளும் நம்பிக்கை மெய் நம்பிக்கையாகாது. அதுதான் உருள்தண்டத்திலும் உள்ளது அல்லவா?

இக்கேள்வியைக் குறித்து நமது சைவ சித்தாந்தம் என்ன கூறுகிறது என்று ஒரு சிறிது ஆராய்வோம். உயிர்கள் முற்பிறவிகளில் இயற்றிய வினைகளுக்கேற்ப இன்ப துன்பங்களை அனுபவிக்கும். இங்கே நல்வினையே புண்ணியம் அல்லது தவம் எனப்படும். இத்தவத்திற்கேற்ப உயிர் எவ்வகை இன்பத்தையும் அடையும். நிலையுறுத்தலை இல்லாத சிற்றின்பங்களாகிய போகபோக்கியங்களுக்கும் நிலையுறுதலையுடைய பேரின்பமாகிய விடுதலைக்கும் காரணமாகும். இந்தத் தவமும் அதனால் தரப்படும் பலன்களுக்கேற்ப பசுபுண்ணியம், சிவபுண்ணியம் என இருவகைப்

படும். இவற்றுள் பசுபுண்ணியமாவது உலகபோகங்களைத் தருவது. இவைகளே வேதங்களில் கூறப்படும் வேள்வி யாதி தருமங்கள். இவைகளைக் கூறும் நூல்களே இவற்றால் தரப்படும் போகபோக்கியங்களையும் உடன்கூறும். இத் தர்மங்களும் அவற்றால் தரப்படும் பலன்களும் சிறிது காலத்தில் அழிவுறும். இத்தன்மை உள்ள தவம் இயற்று வார், புசித்து உண்டு பின்னும் பசித்தாரை ஒப்பர்.

ஆனால் சிவ புண்ணியமோ வேறு தன்மையது. அது சிவாகமங்களில் கூறப்படும் சரியை கிரியை யோகங்கள் ஆவன. இவற்றால் தரப்படும் பலன்கள் சாலோக சாமீப சாரூப்பியங்கள் ஆன சிவபதங்கள். இச்சிவபதங்களான பலன்களும் மேலே கூறிய சரியாதி தவங்களால் இடையில் தரப்படுவனவே. இப்பலன்களையன்றி இத்தவங்கள் வேறு பலன்களையும் தரும்.

சரியை கிரியையும், கிரியை யோகத்தையும், யோகம் ஞானத்தையும் தரும். இந்த ஞானமே சிவத்தால் உணர்த் தப்படும் என்று மேலே கூறிய ஞானம். ஞானத்தை உணர்த்தற்குரியார் சரியை கிரியை யோகங்களில் முற்றிய வரே. அதனாலேயே சிவம் இந்த ஞானத்தைச் சரியை கிரியை யோகங்களில் முற்றிய உயிர்கட்கே உணர்த்தும்.

இந்தக் கருத்தைச் சிவஞானபோதம் 8-ம் சூத்திரம் "தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த" என்று கூறியது. இங்கே தவம் என்றது சரியையாதி சிவதர்மங் கள் எனப்படும்.

இந்தக் கருத்தை ஆராயின் உருள்தண்டங்கள் முதலிய உடல்செய்யும் முயற்சிகள் மேலான சிவதர்மங்கள் ஆகுமா? அவைகளால் முற்றியதவம் ஏற்படுமா? உண்மை பலன் களை அடைய முடியுமா? ஆராயுங்கள்.

தஞ்சாவூர்த் தட்டான் திறம்

சித்தாந்த ரத்நாகரம்
முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், ஆரணி

தஞ்சாவூர் தட்டான் என்றதும் அவ்வூர்தட்டார் சிலர் திடுக்கிட்டு உற்றுணர்ந்தோ உணராதோ வருந்தவோ மகிழவோசெய்யலாம். ஆயினும், இத்தலைப்பு அவரை வருத்தத் தோன்றியதன்று. சைவ சமய நூலாசிரியர் ஒருவர் திருவாய் மலர்ந்தருளியதொரு பாட்டின் உண்மையை நினைப்பூட்டத் தோன்றியது இது.

பன்னிரு திருமுறைகளுள் பத்தாவது திருமந்திரமாலை என்பதும் அதனை அருளியவர் திருமூல நாயனார் என்பதும் யாவரும் அறிந்தனவேயாகும். அத்திருமந்திரமாலையுள் இருந்த மணிகள் பல அக்காலத்திற் களவாடப்பட்டன என்றும் பின்னர் புதிய மணிகள் இடையிடையே அரையுங் குறையும் நிறையுமாகக் கோக்கப்பெற்றன என்றும் உணர இடனுண்டு. களவு போன மணிகளுள் ஒன்று இக் கட்டுரையாலும் குறிக்கப்பெறலாம்.

"தஞ்சாவூர்த் தட்டான் எனமூலர் சாற்றுநெறி
நெஞ்சால் நினைவுற்றேன் நின்மலர்த்தாள்—எஞ்சாதே
தன்னையழித் தெற்பண்ணித் தன்னில் எனையழித்துத்
தன்னைமிகப் பண்ணுதலாற் றான்"

என்னும் ஒரு வெண்பா, சிவாநந்த மாலை (368)யிற் கிடைக்கின்றது. இதனால், திருமூலநாயனார் தஞ்சாவூர்த் தட்டான் என்று தொடங்கும் ஒரு திருமந்திரத்தினை அருளினார் எனல் வெளிப்படுகின்றது. இத்தொடக்கத்தையுடைய திருமந்திரம் எப்பதிப்புள்ளும் இருக்கக்கண்டிலேம். மாவை-வே. விசுவநாதப்பிள்ளை அவர்கள் பதிப்புரையுட் குறித்தவற்றுள்ளும் ஈதில்லை.

இத்திருமந்திரம், ஆசிரியர் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் கிடைக்கப்பெற்று, இதன் பொருளை யுணர்ந்து

இன்புற நல்வினை செய்திலேமெனினும், சிவாநந்த மாலை யாசிரியரால் நினைவூட்டப்பெற்று, இதன் கருத்து ஈதா யிருக்கலாம் என்று ஒருவாறு ஊகித்துணர்ந்துவக்கப் பெற்றேமென்று செம்மாக்கின்றேம். இஃது ஈசன் பல் கணத் தெண்ணப்படுதலின் வேறன்மையாலிறுமாத்தல் சாலப் பொருந்தும்.

தட்டான் ஒருவன், முதலில் தன்னை யழித்தானும். பின் சிவாநந்த மாலை யாசிரியரைப் பண்ணினுனும். மீண் டும், அத்தட்டான் தன்னில் அவரை அழித்தானும். முடி வில், தன்னை மிகப் பண்ணினுனும். இவ்வாறு தன்னை யழித்து அவரைப் பண்ணித் தன்னில் அவரை யழித்துத் தன்னை மிகப் பண்ணுதலால், திருமூலர் 'தஞ்சாவூர்த் தட்டான்' எனத் தொடங்கிச் சாற்றும் ஒரு நெறியை நெஞ்சால் நினைவுற்றாராம். அச்சிவாநந்த மாலை யாசிரியர் இவ்வண்ணம் எழுதிய அளவில் அது விளங்குமோ? விளங்கவே செய்யாது. விளக்க முயல்வேம் திருவருட்டுணை கொண்டு. முடிந்தால் திருவருட்டுணை நின்றதென்று மகிழ லாம். இன்றேல் அத்துணைபெற நெடுந்தவம் வேண்டு மென்றுணர்ந்து பெற முயலலாம்.

இப்பாட்டில், தான் யான் என்று குறிக்கப்பெறுவன முறையே சிவனும் சீவனுமாம். 'தன்னையழித்தல்' என்பது பரமசிவம் சொரூப நிலையினீங்கித் தடத்த நிலையடைதலை உணர்த்தும். 'என்னைப் பண்ணுதல்' என்பது, சீவனைப் பாசத்தினீக்கிச் சிவமாக்குதலை யுணர்த்தும் 'தன்னிலென்னை யழித்துத் தன்னைமிகப் பண்ணுதல்' என்பது அநாதி முத்த முத்த சித்துருவாகிய சிவத்தில் ஆதி முத்த சித்துருவாகிய சீவன் ஏகமாய் நின்றே யிணையடிகள் ஒன்றுணர அவ் வீசன் கழல் அப்பணைந்த உப்பின் அணைந்து சேடமாம் உளத்தோடு கவர்த்தலின்றி இயைந்து நிற்றலையுணர்த்தும். 'நாம் ஒழிந்து சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட் டாமோ' என்னும் திருவாசகத்தாலுணர்த்தப்பட்ட அத்து விதநிலையே இது. சிவஞானபோதம் பதினொன்றும்சூத்திரத் தின்கண் இவ்வத்துவிதம் விளங்க வுணர்த்தப்படுகிறது.

மற்றொருவாற்றினும் இதனைத் தெளியலாம். இருபா விருபஃது என்னும் உண்மை நூலின் கஅ-ஆவது திருவகவல்

" கோலங் கொண்டவாறுண ராதே
ஞாலங் காவலன் யான்எனக் கொளீஇப்
பொய்யை மெய்யெனப் புகன்று வையத்
தோடாப் பூட்கை நாடி நாடா
என்னுட் காந்தென் பின்வந் தருளி
யென்னையுந் தன்னையும் அறிவின் றியற்றி
என்னது யான்எனும் அகந்தையுங் கண்டு
யாவர் யாவையும் யாங்கணுஞ் சென்று
புக்குழிப் புக்குப் பெயர்த்துழிப் பெயர்ந்து
மிக்க போகம் விதியால் விளைத்திட்டு
எற்பணி யாளா எனைப்பிரி யாதே
ஓடி மீள்கென ஆடல்பார்த் திட்டு
என்வழி நின்றனன் எந்தை அன்னே!
அருண்மிக வுடைமையின் அருட்டுறை வந்து
பொருள்மிக அருள்தலும் பொய்ப்பகை யாதலுங்
கைகண்டு கொள்எனக் கடலுல கறிய
மெய் கண்டதேவன் எனப்பெயர் விரீஇத்
தன்னுட் காந்து தான்முன் னாகித்
தன்னதுந் தானுமாய் என்னையின் றாக்கித்
தன்னையும் என்னையும் தந்து
தனது செய்யாமையும் எனது செயலின்மையும்
எம்மான் காட்டி யெய்தல்
அம்மா எனக்கே யதிசயந்தருமே"

என்றும், அதனை யடுத்துவரும் திருவகவலில்,

" ஒன்றா காமல் இரண்டா காமல்
ஒன்று மிரண்டும் இன்றா காமல்
தன்னது பெருமை தாக்கா தாயினும்
என்னது பெருமை யெல்லாம் எய்தித்
தன்னை யெனக்குத் தருவதை யன்றியும்
என்னையும் எனக்கே தந்து தன்னது
பேரா நந்தப் பெருங்கட லதனுள்
ஆரா வின்பம் அளித்துத் தீரா
உள்ளும் புறம்பும் ஒழிவின்றி நின்ற

வள்ளன்மை காட்டி மலரடி யருளிய
மன்னன் ''

என்றும் உணர்த்திய அத்துவித நிலையே இச்சிவானந்த மாலை வெண்பாவாலுணர்த்தப்பட்டது. இங்கு முன்னதில், பெத்தம் முத்தி இரண்டுங் கூறப்பட்டன. பெத்தம் 'தன்னை யழித்து' என்றதிற் குறிப்பா யடங்கிற்று.

இவ்வெண்பாவில்

1. *தன்னையழித்தல்*
2. *என்னைப்பண்ணல்*
3. *என்னையழித்தல்*
4. *தன்னைப்பண்ணல்*

என்று நாற்ருெழில் உணர்த்தப்பட்டன. அவற்றைத்

1. *தன்னையழித் தென்னைப் பண்ணல்*
2. *என்னையழித்துத் தன்னைப்பண்ணல்*

என்று இரண்டாயடக்கி, முதலது (1) பெத்த நிலையில் உயிர்கட்குச் சிவனருள் எய்துமாறும், முடிவது (2) முத்தி நிலையில் உயிர்கள் பசுத்துவமொழிந்து சிவத்துமடைந்து சிவானந்தஞான வடிவேயாமாறும் யுணர்த்துதலைத் தெளியலாம்.

பசுபோதம் நீங்கினுர்க்குச் சிவ போதம் எளிதின் எய்தும். இதனைத், 'தன்னைத் தருவோர்க்குத் தானுந்தனைத் தருவன்' என்ருர் அவர்.

தன்னையழித்து எற்பண்ணல் - சிகரம் வகரமாகி, யகரத்தினை வகரமாக்கி நிற்றல். தன்னிலென்னை யழித்தல் - சிகரத்தில் யகரத்தை யொடுக்குதல் தன்னை மிகப் பண்ணுதல். சிகரம் பெருகல் (பரமாநந்த்மேலீடு, பரமானந்த அவசரம்).

'' அஞ்செழுத்தும் அண்ணல் அருள் ஆன்மாத் திரோதமலம்
மிஞ்சி நமத்துரந்து மெய்யருள்வாத்—தஞ்சச்
சிகாரத்தில் யவ்வைவிடுந் தீதிலா இன்பப்
புகாரிற் புகுந்தருந்தப் போய்'' (துகளறுபோதம் 82)

—

9. ஒழிபு

திருமுறைப் பெருவிழாக் காட்சி

"சென்று சென்று தொழுமின் ...
... ... தண்கழுக் குன்றே" —தேவாரம்

தமிழ் வேத வெற்பாம் திருக்கழுக்குன்றத்தில் சென்ற ஆனித் திங்கள் **6, 7, 8—7—1951** நாட்களில் மாணிக்க வாசகர் திருநாளில் நிகழ்ந்த திருமுறைப் பெருவிழாக் குறித்துப் பேசவும் எளிதோ !

அம்பிகையின் திருக்காட்சி: தமிழ் நாட்டின்கண் தொண்டை மண்டலத்தின் தனி மகுடம் போன்ற தண் கழுக்குன்றந்தனில் ஆண்டுதோறும் நஞ்சமய அருட்குரவ ராம் மாணிக்கவாசகர் நன்னாளில் சென்று அவர் தந்த தமிழ் வேதத்தைப் பாடிப் பரவிப் பெரும் பயன் கொள்ளும் நன்னிகழ்ச்சி சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் சார்பில் ஆசிரியர் திரு. இளவழகனார் அவர்களால் துவங் கப் பெற்று கடந்த நான்காண்டுகளாக மிகச்சிறப்பாக நிகழ்ந்து வருகின்றது.

இதனை யொட்டியே இவ்யாண்டும் அத்திருக் கூட்டத் தினர் 6—7—51 வெள்ளி மாலை சென்னையினின்றும் பல அன்பர் குழாத்துடன் இறைவன் காதல்செய் கோயிலாங் கழுக்குன்றுக்கு யாத்திரை செய்தனர். அன்று மாலை சுமார் 7 மணிக்குத் திரு அருள் நெறி யன்பர்கள் மறைமலை யின் தாழ் வரையில் அடியார் திருக்கூட்டத்திற்கு வரவேற் பளிக்க ஏற்பாடாகி யிருந்தது. வாலாஜாபாத் இந்துமதப் பள்ளி மாணவர் முன்னணி செய்து பாண்டு, குழல் வாத்தி யங்களால் வம்மின் என்றிசைக்க சிதறியிருந்த அன்பர் குழாம் தாழ் வரையில் ஒன்று சேர்ந்தது. அதன்பின்னர் திரு அருள் நெறியன்பர்களின் வரவேற்புரைத்தாள் வழங்கி வாசிக்கப் பெற்றது. திருக்கூட்ட அமைச்சர் நன்றி யுரையைத் தெரிவிக்க விழாத் தலைவருக்கும், அமைச்சருக் கும் துணையமைச்சர் தெய்வ சிகாமணிக்கும் மலர்மாலை சாத்தப் பெற்று வாத்திய ஒலிகள் முழங்க வீதிவலமாக தாழக் கோயிலை யணுகினர். வந்திருந்த அன்பர் யாவரும்

தத்தம் உள்ளுணர்வு உந்த அருளின் பிறப்பகமாம் அம்பி கையின் திருக்கோலத்தைத் தம்மை மறந்து அனுபவித்தனர். அம்மனின் பொலிவு அன்று உயிரை ஈர்க்கும் வகையில் மிகச் சிறப்பாகவே அமைந்திருந்தது. சிறுபோழ்து கழிந்த பின் திருநாவுடையர் - C. சங்கரலிங்கம் பிள்ளையவர்தம் இன்னிசை துவங்கியது. அன்பர் பலரும் இரவு 12-மணி வரை அன்னார் இசையின்பத்தில் திளைத்திருந்தனர்.

திருப்படி விழா : மறுநாள் (7—7—'51) காலை சுமார் 7-மணிக்கெல்லாம் உண்டியளித்து உயிர்வளர்க்கும் திரு. வள்ளியம்மையார் தந்த சிற்றுண்டிக்குப்பின் அன்பர்கள் தாழ்வரையில் கூடினர். திருப்புகழ்மணி T. M. கிருஷ்ண சாமி அய்யர் அவர்கள் அன்பர் புடைசூழ, எவ்வுயிரினும் தங்கித் திருநடம் புரியும் ஆடல் மூர்த்தியின் திருநாமந் தன்னை எல்லோருமாகச் சேர்ந்து பாடிவர இசை மிழற்றிக் கொண்டு திருப்படியேறினர்.

அன்பர்தம் அடியுள்ளத்தினின்றும் கிளம்பிய அவன் புகமொலி மறுநாள் வான்வழி அவன் அருளிய மாரிக்கு வித்திட்டாற்போல் ஆயிற்று.

திருப்படி ஒவ்வொன்றிற்கும் கருப்பூரம், பழம், வெற் றிலை வைத்து அவன் திருவடியாக மதித்து வணங்கி ஏறி னர். படிநெடுக வைத்த கருப்பூரத்தின் சோதிக் காட்சி கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாயிற்று. அப்போழ்து ஒரு தாய் அப்பா (இறைவா) என்று வாய் விட்டரற்றியது அனைவருடைய உள்ளத்தையும் கிளறிற்று. இளம்பரிதி யும் சிரித்த வண்ணமாக இக்காட்சியினைக் கண் கொட்டா மல் நோக்கித் தன் கதிரின் வெப்பம் குறைத்து வான்மீது இவர்ந்து வந்தான். திருப்படிகளின் நடுவேயுள்ள ஐந்து மண்டபங்களிலும் தங்கி அவன் புகழ்பேசி உச்சியில் உச்சி சேர்ந்தனர்.

மாம்பாக்கக் குருகுலத் தொண்டர் படையினர் வந்தி ருந்த அன்பர்தம் தாகவிடாயைத் தண்ணீர்ப் பந்தர் அமைத்து வழிநெடுக நின்று அகற்றினர். அடியாருள் மாணிக்கமும் திருமுறை மாநாட்டின் தலைவருமான திரு. சச்சிதாநந்தம் பிள்ளையவர்களும், திருநாவுடைய அண்ணல் திருமுருக கிருபாநந்த வாரியவர்களும் அவ்வமயம் வந்து

சேர்ந்தனர். கழுக்குன்றத்து உச்சியானை வழிபாடு முடித்துக் கொண்டு கழுகுக் காட்சிக்கு அன்பர் அங்கங்குத் தேங்கினர். அக்காட்சியினைக் கண்டு களைப்புடன் திரும்பும் அடியவர்க்குக் குரு குலத்தார் தம் நகருள் தண்ணீர்ப் பந்தரில் மணமுள்ள மோர் வழங்கினர். அடியார் கூட்டம் திரு. வள்ளியம்மையார் அளித்த சிறப்பான பகலுணவை அருந்தி மகிழ்ந்தது.

ஆனால் ஓர் ஒழுங்கு முறையின்றிச் சென்று உணவு பெற்றமை வருத்தத்தையே தந்தது. அடியார் தம் பொறுமைப் பண்பு மேவிட வேண்டும் என்பதற்கு அது ஒரு சோதனை நேரம் போலும்!

திருமுறை மாநாடும் சேய்த் தொண்டர் புராண அரங்கேற்றமும் : உண்ட இளைப்புத் தீர்ந்து மாலை 3–மணிக்குத் துவங்க விருந்த திருமுறை மாநாடும் சேய்த் தொண்டர் புராண அரங்கேற்றமும் என்ற நிகழ்ச்சி காலந்தாழ்ந்து மாலை சுமார் 5-மணிக்கு ஆரம்பமாயிற்று.

சைவ ஞாயிறு திரு. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் தலைமை யேற்றுத் தம்முரை பகன்றனர். அவ்வமயம் வையத்துள் வாழ்வாங்கு வாழும் முறைகள், சீர்திருத்தக் கருத்துக்கள் பல உதிர்ந்தன. எதிர்நோக்கியுள்ள ஆபத்தின் எச்சரிக்கையும் அதற்கு அணை கோலும் உபாயமும் தெளிவிக்கப் பெற்றன.

குறிப்பாக அவர், நாம் எப்போதும் பேசுதலையே விரும்பிச் செய்கின்றோம். பேச்சின் பயனைக் குறித்துக் கவலை கொள்வதில்லை. தென்னாட்டவர் வெறும் வாய் வீரர் என்று பிறரால் இழிவாகப் பேசப் படுகின்றனர். இது மறைய வெறும் அறிவு நீங்கி உண்மை யறிவு பெற்று ஆண்மையாளராய்த் தியாக உணர்வு உருப் பெற்றுச் சற்கரும வீரராய் விளங்க வேண்டும். வீணில் பண்டைய பெருமைகளைப் பேசிப் பொழுதைப் பாழாக்குதல் பயன் தராது. சாந்தம், ஒழுக்கம், அருள் என்னும் பண்புடைமையாகிய அடிப்படையில் கருத்து இருத்திக் கட்டுப்பாடாக வாழவேண்டும். பெறுதற்கரிய மனித்தப் பிறவியை நன்கு மதித்துப் போற்றிக் கொள்ள வேண்டும். யாத்திரை போன்றது வாழ்வு. அதிலும் இவ்வுலக வாழ்வு சத்திர

வாழ்க்கையை ஒத்தது. இந்த நிலையற்ற சத்திர வாழ்வு நினைவு மறந்து வெறும் போலி அலங்கார அலங்கோல வாழ்விலேயே தோய்ந்திருத்தலாகாது. எல்லா வகைக்கும் மேனாட்டவரை மோகித்து நிற்கும் நம்மவர் அவர்தம் கூற்றின் உண்மையை ஆராய்வதில்லை. தற்போது தான் "உலகம் தோன்றுதற்கு ஒரு காரணம் உண்டு. அது ஒரு நோக்கங் கொண்டு படைத்து நடத்தப்படுகிறது" என்பதைக் கண்டு பிடித்ததாக நவில்கின்றனர். இந்த உண்மைக்கும் மேற்பட்டன வெல்லாம் நஞ்சாத்திரங்களில் பரக்க இருப்பினும் 'நம் தோட்டத்துக் கத்திரிக்காய் நமக்கு ருசிப்பதில்லை' என்ற முறையில் கவனம் அவற்றில் பதிவதில்லை. இதனாலேயே இற்றைய மாணவர் உலகம் ஏன் இளங்கூட்டமே சீர்கெட்டு வருகின்றது.

நல்ல நினைப்புகளாலேயே நல்ல பயனைப் பெறமுடியும். அதனால் நம் வாழ்வு குறிக்கோளுடையதாக இருத்தல் வேண்டும். கோட்பாடில்லாத வாழ்வு வாழ்வாகாது. பொருளை மதிக்குந் திறமும், தக்கோரையும் தக்கனவற்றையும் போற்றும் பண்பும் நம்மிடையே அருகி வருகின்றது. வேதம் என்பது அறிவு. அவ்வறிவு மலைக்கு ஒப்பானது. இதனாலேயே ஆண்டவனை வேதத்தின் உச்சி, மலையின் சிகரம் என்றெல்லாம் உலகம் புகழ்கின்றது. வேதம் அல்லது அறிவால் மட்டும் ஆண்டவனை அறிய முடியாது. அது அவனை அடைதற்கு துணைக் கருவியேயாகும். இன்றைய நிலையைவிட மிக இருண்டதொரு காலம் 3 முதல் 5 நூற்றாண்டு வரை சரித்திரம் கண்டுள்ளது. அம்மரணத் தருவாயில் புத்தர் போன்ற அருளாளர் பலர் தோன்றி மக்களைத் தட்டி யெழுப்பி மருண்ட நிலையினின்றும் முழுதும் மாற்றினர். இன்றும் காந்தியடிகள், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், இரமணர் போன்ற ஆத்மவீரர்கள் தோன்றுதற்குரிய தவப் பண்பை மிகுத்துக் கொள்ள வேண்டும்.

வெறும் கல்வியறிவு, அறிவை விளங்கச் செய்வதோடு நிற்கின்றது. ஆனால் சமய அறிவோ மன மாசுகளைப் போக்கத் துணை செய்கின்றது. சுயசோதனை தினமும் செய்து கொள்ளுவதில் ஓர் கிருத்துவரைப் போலிரு. ஆண்டவனைத் தவறாது ஒழுங்கான முறையில் வழிபடு

தலில் ஓர் முகம்மதியரைப் போன்றிரு. சமயத் தொடர் பற்ற வாழ்வு இப்போலி வாழ்வினும் மிக இருண்டதொரு வாழ்வு. முதலில் தாம் மேற்கொண்ட சமயத்தின் உண்மைகளைத் தெரிந்து தெளிதல் வேண்டும். அவ்வுண்மைக்குப் பங்கம் நேரும்போது பிறர்க் கெடுத்துரைக்கும் வீரம் வேண்டும். இந்தச் சமய உணர்வை மிகுத்துக் கொள்ளுவதோடு சமய வளர்ச்சிக்கான வழிகள் பல கோலி அவற்றில் உறுதியுடன் நிற்றல் வேண்டும் எனக் கூறி முடிவில் அவர் நஞ்சமயத்திற்குச் சைவ சித்தாந்த சமாஜம் போன்றதொரு மத்திய சபை ஒன்று வேண்டும். அது அரசியலுடன் தொடர்புடைத்தாய்த் திகழவேண்டும். அரசியல் செல்வாக்கு மட்டு மின்றித் தாழ்வு நேரும் போதெல்லாம் பலன் தரும் வகையில் தக்க பதிலளிக்க வல்லதொரு குழு அமைய வேண்டும் என்றும் மொழிந்து முடித்துக் கொண்டார்.

தலைமை யுரையின் பின்னர் திரு. கி. வா. ஜகந்நாத அய்யர் அவர்கள் சேய்த் தொண்டர் புராணச் சிறப்புக் குறித்துப் பேசியது சுருங்கிய நேரமாயிருந்தும், அது கேட்பார் பிணிக்குந் தகைஅவாய்க் கேளாரும் வேட்பத் தகுந்ததாய் இருந்தது. குறிப்பாக அவர் அடியார் புகழே நமக்குப் பெரியபுராணம். அது ஆண்டவனிடம் சிபாரிசு செய்வதொரு வைப்பு.

நல்லனவற்றை யெல்லாம் கவிதையாக்கிக் கண்டு களிப்பதோடல்லாமல் அவற்றைப் போற்றுவது நந்தமிழ் நாகரிகம். அதிலும் அடியார் புகழ் பாடுதலே நாவைப் பெற்றதன் பயன்; வாழ்வென்னும் வண்டி நம்பிக்கையென்னும் தண்டவாளத்தின் மீது செல்வது. அந்த நம்பிக்கையைத்தான் நம்மவர் ‘கொள்கை’ யென்றும் மதம் என்றும் நவில்கின்றனர். இன்றைய நிலையில் மனிதன் தவருக நம்பிக்கையில்லாத அதாவது நிலையற்ற பொருள் களிலெல்லாம் நம்பிக்கை வைத்து நம்பிக்கை வைக்க வேண்டிய ஆண்டவனிடத்தில் நம்பிக்கை வைப்பதில்லை. இலக்கியந்தான் வேண்டும் என்று கூக்குரலிடும் இக்காலத்தவர் செந்தமிழிலக்கியமாந் திருமுருகாற்றுப்படையைப் பார்ப்பதேயில்லை. அதில் இயற்கையுள் விளங்கும் பேரா இயற்கை யெழிலை ‘முருகன்’ என்னும் பெரும் பெயரிட்டுத் தீந்தமிழால் வழங்கினர். இயற்கையுள் கண்ட தெய்

வத்திற்கு இயற்கையில் எழுந்த மலையே இடமாக அமைந்தது. இவ்வாறு முருகன் அல்லது அழகை விரித்துப் பேசுங்கால் ஓர் அம்மை அவ்வழகில் ஈடுபட்டவராய்த் தம்மை மறந்து 'முருகா முருகா' என ஆவேசித்தனர். முடிவாக ஐயம் நீங்கத் தொல்காப்பியத்தையும், திருவள்ளுவரையும் பல்கால் பயிலவேண்டும்; அன்பு வளர மூவர் முதலியோர் போற்றிய தமிழ்த்தேனும் திருமுறைகளையும் உள்ளவேண்டும்; அறிவு வளரத் திருக்கோவையாரைப் போற்றுதல் வேண்டும் என்றும் சொன்னார். சேய்த்தொண்டர்புராணம் இந்நலங்கள் பலவும் உட்கொண்டு நன்கு அமைந்துள்ளது என்று திறம்படப் பேசி முடித்துக்கொண்டார்.

அதன் பின்பு திரு. கோவிந்தராசு பிள்ளையவர்கள் மணிவாசகப் பெருந்தகையருளிய திருக்கழுக்குன்றப்பதிகங் குறித்துச் சிறிதுநேரம் பேசினார். தம்முரையில் அவர் பதிகமென்பது பத்துப்பாட்டுகளையுடையதென்றும் திருக்கழுக்குன்றப்பதிகத்தில் மூன்று பாட்டுகள் இழப்பு நேர்ந்துள்ளதென்றும் கூறினர். திருக்கழுக்குன்றம் மணிவாசகருக்கு ஓர் திருவடி வைப்புத்தலமாக அமைந்த அழகினை விளக்கினார். அவருக்களித்த காட்சியைக் "கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே" என்பதனால் அக்காட்சி மன, மெய், மொழிகளாலும் விவரிக்கவொண்ணாத கருணைத்திருமேனி என்று பேசினார். மேலும் அவர் அப்பதிகத்தின் ஆறுவது பாட்டின் கருத்துச் சிவஞான போதத்தின் "ஐம்புலவேடரின்......" எனவரும் 8-வது சூத்திரக் கருத்தோடு ஒப்புடைமையைக் குறித்தார்.

ஒருவர்பின் ஒருவராக புலவர் முருகவேள், தணிகை மணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, திரு. இராசகோபால் பிள்ளை, திரு. சோமசுந்தரஞ் செட்டியார் முதலியோர் சொற்பெருக்காற்றினர். முடிவில் செய்த் தொண்டர் புராண ஆசிரியர் தேனூர் வரகவி சொக்கலிங்கம் பிள்ளை அவர்கட்குச் சால்வைபோர்த்த அவர்தம் நூல் அரங்கேறியது. அவர் ஆண்டவனைவிட அவன் அடியார்மீது தமக்கு இயல்பாயெழுந்த பக்தியனுபவத்தை யாவரும் பரவசமடையத் தமக்கேயுரிய பாணியில் பேசி அவையிலுள்ளோரை மகிழ்வித்தார்.

மாநாட்டுத்தலைவர் தமது முடிபுரையில், வந்திருந்த புலவர், அடியார் திருக்கூட்டம், ஆண்டவன் திருமுன் முதலானவற்றை நூல் அரங்கேறுதற்குரிய அமைவாகக் கொண்டு அரங்கேற்றினர். முடிவாக ஒவ்வொருவரும் நலந்தரும் தனிச் செயலொன்றையும், கூட்டுச் செயலொன்றையும் மேற்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தி அப்போதுதான் உலகம் உய்யும்; பிணித்தளையினின்றும் நீக்கம் பெறும் என்றும் கூறினர். மீண்டும் தனிச்செயலென்பது சுயசோதனை யென்பதும் உலகமுய்ய விடுக்கும் வேண்டுகோள் என்பதும், கூட்டுச்செயலென்பது கூட்டுப் பிரார்த்தனை போன்ற தெய்வ நம்பிக்கையை வளர்க்குஞ் செய்கை யென்பதையும் விளக்கினர். இறுதியாக வரப்போகும் அரசியல் வாக்கெடுப்பு அறியாமை, சத்தியம், ஒழுக்கம் முதலியன குன்றியுள்ள சூழ்நிலையில் தகுதியாக நடைபெறுமோ என்று ஐயுற்றுக் கூறினர். வாக்கெடுப்பின் போது சமயத்தின் உண்மையுணர்ந்து அதன் வளர்ச்சியில் ஆர்வமுள்ள தகுதியாளரை அறிந்து வாக்குத்தருமாறு வேண்டிக்கொண்டார். சமயிகள் ஒற்றுமையாக இருந்து உண்மையைச் சாதிக்கவேண்டிய சமயமிது என்று கூறி முடித்தார்.

ஈண்டு நிகழ்ச்சிகள் பல செறிவாக அமைத்துக்கொள்வதின் இடர்ப்பாட்டை நன்குணரும் வாய்ப்பு ஏற்பட்டது.

மாநாடு முடிவடைந்து திருமுருக கிருபாநந்தவாரியர் தம் விரிவுரை, திருமுறைகள் என்னும் பொருள்மேல் உடனே எழுந்தது. அவர் மொழிகளுள் தமிழ் சிறந்தது; ஆண்டவன் விரும்பிக் கேட்கும் மொழி, தமிழால் வைதாரையும் திருவருள் வாழவைக்கும். தமிழால் ஆண்டவனைத் துதிக்க அது அவன் செவிக்கு முந்தும் ஆற்றல் வாய்ந்தது. "முந்து தமிழ்மாலை கோடி கோடி" என்ருர் அருணகிரியாரும்; எனவெல்லாம் தமிழைத் தக்க எடுத்துக்காட்டுகளால் விளக்கினர். தமிழ் இனிமையும் நீர்மையும் உடையது; மென்மையுடையது; தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்தது. தமிழ் பேசமூச்சடங்கும்; அதனல் ஆயுள் வளரும். கன்றைக் காட்டினபோதே பசுவின் மடியில் பால் சுரப்பது போல் தமிழால் இறைவனைப் பேச அவன் அருள் சுரக்கும். ஆண்டவனருளைப் பெறுதற்குச் சுலபவழி தமிழின் துணை

பெறுதலே எனவெல்லாம் தமிழின் நீர்மையை விளக்கிக் காட்டினர்.

தலைப்பிற்கு உறுதுணையாகப் பல பொருள் குறித்துப் பேசினர். அவையனைத்தும் இக்கால இளங்கூட்டத்தின் மனதை எளிதில் ஆட்கொள்ளும் மாறான கருத்துக்களைப் போக்குவனவாயிருந்தன. அவற்றுள் ஆண்டவன் திருக் கையில் உள்ள வேல், அறிவு ஆழமாகவும், அகலமாகவும், கூர்மையாகவும் செல்லுதல் வேண்டும் என்பதை உணர்த்து கின்றது ; மணிவாசகரும், "ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" என்றார் என்பவைபோன்ற விளக்கக் கருத்துக்கள் இருந் தன.

தமிழ்வேத வெற்பில் அதிலும் மாணிக்கவாசகர் திரு நாளையொட்டி இத்தகைய தமிழ்ச் செய்கை நிகழும் சிறப் பினைப் பாராட்டினர். அறவாழ்வுக்கான உண்மைகள் பல புகன்ற அவர்தம் சொல்மாரி, காலக்குறைவு கருதி இரவு சுமார் 11 மணிக்கு நின்றது.

திருமுறைப் பெருவிழா : மறுநாள் (8-7-1951) ஞாயிறு காலை சுமார் 7-மணிக்கு விழாத் தலைவர் திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் தலைமையில் திருமுறை மலைவலம் தாழக் கோயிலினின்றும் இனிது துவங்கியது.

பன்னிரு திருமுறைகளும் யானைமீது அழகுற ஏற்றி அலங்கரிக்கப் பெற்றிருந்த காட்சி பெருவிருந்தாயிற்று. அதன்பின் நால் பெருமக்கள் விமானத்தின்மீது வரிசையாக அலங்கரிக்கப்பெற்று இவர்ந்துவந்த காட்சி அனைவருடைய உள்ளத்தையும் கவர்ந்தது. நால்வருக்குப் பின் அவரைப் பின்பற்றும் அடியவர்குழாம் அணியணியாய் நின்று அவர் தந்த தமிழ்வேதங்களை வாய் மணக்கக் கேட்பவர்தம் செவி இனிக்க ஓதிக்கொண்டு மலைக்கு மாலையிடுவதேபோல் வலம் வந்தனர். தேவாரகோட்டிகள், திருவாசக கோட்டிகள், வள்ளலார், அடியவர் கூட்டங்கள், மாதர் அணிகள் எனப் பல திருக்கூட்டங்கள் பரவிப்போந்த காட்சி அகத்தேயும் புறத்தேயும் தேங்கித் துளும்பிப் பேரின்பம் விளைத்தது. திருமயிலையினின்றும் போந்து தேவார திருவாசக இன் னிசை பரப்பிய இளம் அடியார் கூட்டம் நெஞ்சினின்று மகலாத நெடுங்காட்சியாகும். எல்லா அடியாரும் சஞ்சீவி மலைச்சாரலின்கண் திருவடி வழிபாட்டிற்குத் தேங்கினர்.

அவ்வமயம் திரு. வாரியார் அவர்கள், குருகுல வெளியீடான திருக்கழுக்குன்றப் பதிகங்கள் என்ற சிறுநூலைப் போற்றி அரங்கேற்றினர். சஞ்சீவிமலைச் சாரலில் ஆண்டவன் திருவடிகட்கு வழிபாடுகள் செய்து வணங்கிக்கொண்டு பின் கோட்டிகள் பலவும் ஒழுங்காகப் பாடிப் பரவி மேற் சென்றனர்.

மாம்பாக்கம் குருகுலத்தொண்டர் படையினர், அடியவர் ஈட்டத்திற்கு நீர் வேட்கையால் அவர்தம் பரவுதல் பாதிக்காவண்ணம் முழுதும் காத்தனர். ஏறத்தாழ உச்சிக் காலத்துக்குள் மலைவலம் நிறைவேற யாவரும் உணவு கொண்டு சிறிது இளைப்பாறிச் சஞ்சீவிமலைச் சாரலில் குறித்த நிகழ்ச்சிக்குப் புறப்பட்டனர்.

தடுத்தாட்கொண்ட புதுமை : சஞ்சீவிமலைச் சாரலில் அடியவர் சுமார் பிற்பகல் 5½ மணிக்குத் தடுத்தாட்கொண்ட புராணத் தொடக்கத்திற்கும் மோனத்தேனிப்பிற்கும் (தியானம்) கூடினர். வாரியாரவர்கள் தடுத்தாட்கொண்ட புராணத்திற்குத் தோற்றுவாய்போலச் சிறிது ஆரம்பித்தார். உடனே விண்ணினின்று (அருள்) மாரியும் தூறலாய்த் தொடங்கியது. தலைவர் J. M. சோமசுந்தரம் பிள்ளையவர்களும் சிறிது பேசினர். தடுத்தாட்கொண்ட புராணம் தொடங்கவிருந்த நேரத்தில், ஆண்டவன், தன் விருப்பம்போல் வான்வழிக் கருணைபூத்து அமிழ்தம்போல் அனைவருடைய உடலும் உளமும் குளிர மாரியருளைப் புரிந்தார்.

அடியார் சிலர் மனத்துள் தேனிப்புப் பழகிக்கொள்ளுவதையும் தடுத்து ஆட்கொண்டாரே என்றிருந்தது. அக் கொட்டு மழையிலும் பெரும்பாலும் அடியவர் நால்வர் வழிபாடு முடித்துக்கொண்ட பின்பே சென்றனர். வந்திருந்த ஆடவர், பெண்டிர், சிறுவர் யாவரும் தம் உடல் நனைய உளம் குளிரக் கழுக்குன்றத்தானையே நினைந்தனர் புது உலகம் காண விழையும் இற்றை நாளில் ஆண்டவனும் தன்னை ஆட்கொள்ளும் திறத்தைப் புது முறையில் அருளிச் செய்ய அனைவரும் வியந்தனர்.

உடைமாற்றி உணவுகொண்ட பின் வன்னியசத்திரத்தில் திரு. ஆ. விநாயகமுதலியாரது திருமுறை இசையரங்

கிற்கு ஏற்பாடாகியிருந்தது. அவர் அழகாக இசை பரப்பியபின், வாலாஜா இந்துமதப் பள்ளி மாணவர் ஆசனப் பயிற்சிசெய்து அவற்றின் பலனையும் இனிது விளக்கினர். அதன்பின்னர் ஆசிரியர் இளவழகனர் தடுத்தாட்கொண்ட புராணத்தைத் தொடங்கிச் சிறிது பேசினர். அவர்தம் உரையில் ஆண்டவருக்குத் தடுத்தாட் கொள்வதே செயல் என்றும் சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட உண்மையும், சேக்கிழார் திருவாக்கின் பெருமையும், புதியமுறையில் தடுத்தாட்கொள்ளும்வரை இன்று வெளிப்பட்டதென்றும் சொன்னர். தடுத்தாட்கொண்டபுராணத்தில் முதல் சொல் "கங்கையும்..." என்றிருத்தலினல் ஆண்டவனும் அந்த உண்மையை அதாவது கங்கையை முதலில் செயலில் காட்டித் தம் அடியவரும் அவ்வண்ணமே செய்கை முதலும் சொல் பின்னுமாக நியதிசெய்துகொண்டு நடக்கவேண்டுமென்பதை இன்று நன்ருக உணர்த்தினர் என்பதை விளக்கினர்.

ஒவ்வோர் ஆண்டும் இப்புனித நன்னளில் தமது அடியார் ஒழுக்கம் ஓர் முறையாகவேண்டுமென்பதைச் செயலில் கடைப்பிடிக்கும் ஆசிரியர் பிறப்பறுக்கலுற்ருர்க்கு மேலங்கிகளும் மிகையென்று இவ்யாண்டு அதனை அளவுபடுத்திக் கொண்டனர்.

இவ்வாருக, கர ஆண்டின் கழுக்குன்ற யாத்திரை சென்னைச் சிவனடியார்திருக்கூட்டச் சார்பில், திருவருளால் ஆயிரக்கணக்கான அடியவர்களுடன் இனிது நிகழ்ந்து நிறைவேறியது.

> " ஞாலம் நின்புகழே மிக வேண்டும்—தென்
> ஆலவாயில் உறையும் எம்ஆதியே "

சைவசித்தாந்த மகா சமாஜம், சென்னை

போஷகர்

824\. திருச்சி. S. கனக சபாபதிபிள்ளை
825\. சென்னை. A. சோமசுந்தரஞ்செட்டியார்
830\. திருவெண். M. சின்னசாமி ரெட்டியார்

831. தாம்பரம். டாக்டர். S. பாலவேலாயுதம்
899. கோவை. C.M. Ramachandran Chettiar
955. S. S. சபை, தூத்துக்குடி
1842. முசிரி. S. குமார வீரய்யர்
1957. நச்சாந்துபட்டி. P. Rm. Ct. சிதம்பரம்செட்டியார்
2049. சிதம்பரம். S. இரத்தினசாமி செட்டியார்
2142. புரிசை. முருகேச முதலியார்
2257. மயிலம். சிவஞானபாலேய சுவாமி
2273. சென்னை. K. அரங்கசாமி முதலியார்
2368. சென்னை. T. M. நாராயணசாமி பிள்ளை
2398. சேலம். A. K. காமாட்சி அம்மாள்
2419. சீர்காழி. T. திருவேங்கடம் பிள்ளை
2700. சென்னை. M. பாலசுப்பிரமணிய முதலியார்
2706. கோவை. V. C. சுப்பையா கவுண்டர்

ஆயுள் சந்தாதாரர்

71. கவுணியன் பிரஸ், சென்னை.
175. தூத்துக்குடி. N. சிவகுருநாதன் பிள்ளை
288. சென்னை. S. நமசிவாய முதலியார்
297. வாலாஜாபாத். W. T. மாசிலாமணி முதலியார்
474. கொத்தமங்கலம். T. Pl. Ct. சதாசிவம் செட்டியார்
616. பள்ளியாக்கிரஹம். N. கந்தசாமி பிள்ளை
811. சென்னை S. சச்சிதானந்தம் பிள்ளை
829. திருநெல்வேலி. N. சங்கரநாராயண பிள்ளை
833. கி. மருதூர் T. K. நாராயணசாமி நாயுடு.
834. கடலூர். அலர்மேலு மங்கையம்மாள்
851. கீவளூர். A. அருணசல முதலியார்
855. வாலாஜாபாத். M. T. கன்னிவேல் செட்டியார்
866. திருநெல்வேலி. G. சுப்ரமண்ய பிள்ளை
874. பரங்கிமலே. A. பொன்னுசாமி முதலியார்
1174. சென்னை. S. திருநாவுக்கரசு பிள்ளை
1359. சிதம்பரம். Sri. Nataraja Picture Works
1824. வேலூர். K. கிருஷ்ணய்யர்
1980. சென்னை. S. வையாபுரி பிள்ளை
2046. கொத்தமங்கலம். C.Rm. M. லக்ஷ்மணன்செட்டியார்
2068. தாம்பரம். P. ஆலாலசுந்தரம் செட்டியார்

2212. சென்னை. V. தியாகராஜ முதலியார்
2242. பொ. வேலூர். R. M. மாணிக்கம் பிள்ளை
2247. சிலோன். C. பொன்னம்பலம்
2283. ஆலவக்கோட்டை Sp. Ct. சிவசுப்பிரமணியஞ் செட்டியார்
2301. பலவங்குடி. Rm. Km. S. குமரப்ப செட்டியார்
2324. சிலோன். A. தியாகராஜா
2326. சென்னை. என். எஸ். ஏ. ஆர். அருணசலம்செட்டியார்
2334. அண்ணுமலைநகர். P. R. சுவாமிநாதன்
2374. சிலோன். K. ரத்தினவேல்
2378. ,, சோம சரவணபவன்
2413 கண்டமாணிக்கம். விசாககாசி செட்டியார்
2425. திருத்துறையூர். K. ஆறுமுக நாயனுர்
2433. நச்சாந்துபட்டி. P. Rm. Rm. L. லட்சுமணன் செட்டியார்
2443. சங்கரன் கோயில். இ. எம். சுப்பிரமணியம் பிள்ளை
2456. கோட்டையூர். அழகப்ப அண்ணுமலை
2469. ஆடுதுறை. V. K. விருத்தாசலம் செட்டியார்
2473. சிதம்பரம். என். எம். பொன்னம்பலம் பிள்ளை
2563. திருநாவலூர். S. S. சங்கம்
2570. சிலோன். அருளம்பலம்
2611. பள்ளத்தார். ஓ. ஏ. பி. ஆர். எம். அருணசலம் செட்டியார்
2648. சிதம்பரம். வி. எம். கலியாணசுந்தர நாடார்
2662. சிலோன். ஏ. கோபால பிள்ளை
2694. கோவை. இராமகிருஷ்ண நாயுடு
2695. ,, எஸ். ஏ. கே. நஞ்சப்ப செட்டி
2696. ,, எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டி
2697. ,, K. தாண்டவன் செட்டி
2698. திருவாரூர். டி. என். சபாபதி முதலியார்
2710. வன்னிவேடு. மகாதேவ முதலியார்
2720. அரிமலம். Pm. Rs. S. செல்லப்ப செட்டியார்
2722. போதனூர். வி. பி. சுப்பிரமணியம் பிள்ளை
2731. தாம்பரம். வி. கே. லக்ஷலிங்கம்
3023. சிலோன். Dr. விஸ்வலிங்கம்
3142. ஈரோடு. வி. வி. சி. ஆர். முருகேச முதலியார்

3184. சென்னை. என். டி. கிருஷ்ணசாமி முதலியார்
3185. சிதம்பரம். என். சுந்தரம் செட்டியார்
3191. கொழும்பு பாளயகாட் கம்பெனி
3192. கண்டி பாளயகாட் கம்பெனி
3193. ,, எஸ். மகாதேவா
3194. ,, கே. சிங்கார முதலியார்
3195. ,, டி. அண்ணாமலை முதலியார்
3196. சென்னை பாளயகாட் கம்பெனி
3197. திருவாரூர். டி. கே. சத்திவிநாயக முதலியார்
3198. ,, எம். வி. எம். மகாதேவ முதலியார்
3199. நாகப்பட்டினம் ஆர்.எம்.எஸ். இராமசாமிமுதலியார்
3200. ,, டி. சாமிநாத முதலியார்
3201. ,, டி. எம். சண்முகசுந்தர முதலியார்
3202. திருவாரூர். N. உருத்ரபதி முதலியார்
3203. நாகை. ஆர். விநாயகமூர்த்தி முதலியார்
3204. ,, ஏ. எம். திருநாவுக்கரசு முதலியார்
3205. ,, ஆர். எம். பி. இராஜகோபால் முதலியார்
3206. திருவாரூர். எஸ். கே. சொக்கலிங்க முதலியார்
3246. புதுக்கோட்டை. எஸ். எம். கே. ஆர்எம். கோவிந்தன் செட்டியார்
3253. குத்தாலம். பி. எஸ். நாகலிங்கம் செட்டியார்
3755. கோவை. டி. பி. டி. எஸ். இரத்தினசபாபதி முதலியார்
3256. ,, சி. ஆர். சதாசிவ முதலியார்
3262. புதுப்பாளையம். பி. எஸ். முத்துவேலப்ப கவுண்டர்
3264. கோ. பி. கே. எம். இராமசாமி
3266. பொள்ளாச்சி. எஸ். பி. கருப்புசாமி
3267. கொழும்பு. P. கிருஷ்ண பிள்ளை
3302. டி. பாலூர். எம். ராமலிங்கம் செட்டியார்
3306. சிதம்பரம். கெ. கோடிலிங்கம்
3307. சிலோன். எஸ். கார்த்திகேசன்
3312. வாழ்மங்கலம். கே. பி. எல். அருணாசல முதலியார்
3341. திரிச்சி. எஸ். செங்கமலம் பிள்ளை
3404. காரைக்குடி. Pl. T. L. தேனப்ப செட்டியார்
3510. கே. எம். எஸ். நடேச முதலியார்
3511. கே. எஸ். எஸ். சுப்பிரமணிய முதலியார்

3512. திருமருகல். கோவிந்தசாமி முதலியார்
3513. திருவாரூர். வி. எஸ். தியாகராச முதலியார்
3531. Madras P. S. Venugopalaswamy Naidu
3571. கொழும்பு. டாக்டர். டி. நல்லநாதன்
3572. ,, கே. வி. சுந்தரம்

மதிப்புரை

1. திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் உரை :—பாறு கோயில் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் தொகுத்து வைத்திருந்தது. சைவத்திரு. முத்துவைத்ய லிங்கச் செட்டியார் மணிவிழாமலராக வெளியிடப்பட்டது. மிக அரிய உரை. உந்தியார் பாடல்களையும் களிற்றுப் படியார் பாடல்களையும் இணைத்து ஒப்புவமை தெரிந்து, சித்தாந்தக் கருத்துக்களைத் தொடர்ச்சியாகக் கூறுவது. இந்த முறைவைப்பு இதுவரை எவரும் செய்ததாகத் தெரியவில்லை. தம்பிரான் சுவாமிகள் மிகச்சிறந்த சைவசித்தாந்தப் பெரியார் என்று தமிழுலகமே அறியும். அவர் தொகுத்து வைத்திருந்த நூலை வெளியிட்ட செய்கை மிகப்போற்றத் தக்கது. கிடைக்குமிடம் : அ. மு. வைத்திலிங்கச் செட்டியார், 15, மாலைக்கட்டி தெரு, சிதம்பரம்.

2. தமிழ் இசைச்சங்கம் :—தமிழிசை ஆராய்ச்சிக் குழு நடத்தின ஆராய்ச்சிக் கூட்டத்தின் இரண்டாவது ஆண்டு அறிக்கை. மேற்கண்ட கூட்டத்தில் 1950 டிசம்பர் 27, 28 29-தேதிகளில் இசை அறிஞர்கள் 14 பேர் கூடி தமிழ்ப் பண்முறைகளை ஆராய்ந்து முடிவுகட்டிவைத்த அறிக்கையாகும். ஒவ்வொரு பண்ணைப்பற்றியும் ஒவ்வொரு விவாதம் ஏற்பட்டுப் பல இசைவாணர்கள் அதில் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். திரு. R. K. சண்முகம் செட்டியார் வரவேற்புரை, T. M. கிருஷ்ணசாமி ஐயர் தொடக்கவுரை, சாம்பமூர்த்தி அவர்கள் தலைமை உரை இவைகள் உள்ளன. பழம்பஞ்சரம், சாதாரி, புறநீர்மை, மேகராகக்குறிஞ்சி, தக்கராகம், பழந்தக்க ராகம், காந்தாரம், நட்டராகம், தாண்டக நேரிசை முதலியவைகளுக்கு உதாரணப்பாடல்கள் திருமுறைகளிலிருந்து பாடப்

பட்டன. அவைகளைப்பற்றிய விவாதங்கள் குறிக்கப்பட்டுள்ளன. சுரதாளக் குறிப்புக்களும் எழுதப்பட்டுள்ளன. இந்த வெளியீடு தமிழிசை அன்பர்களுக்கு மிகவும் பயன் படும். கிடைக்குமிடம்: சென்னைத் தமிழிசைச் சங்கம்.

செய்தித் திரட்டு

7-10-51 முதல் - திருவையாறு தேவஸ்தானத்தில் தருமபுர மகாசந்நிதானத்தின் திருவுளப்படி திருத்தொண்டர்புராணச் சொற்பொழிவுகள் பிரதி சோமவாரம்தோறும் நடைபெற்று வருகின்றன. தமிழ் ஆசிரியர் திரு. ரா. கோவிந்தசாமி பிள்ளையவர்கள் தொடர்ந்து சொற்பொழி வாற்றுவார்கள்.

* * *

30-10-51 முதல் – கோவை - இரத்தின விநாயகர் கோயிலில் - கந்தர்சஷ்டி விழா நடைபெற்றது. முதல்நாளும் இறுதி நாளும் சிவக்கவிமணியவர்களும், மற்றை நாட்கள் வித்வான் க. அருணாசலம் பிள்ளையவர்களும் கந்தபுராணப் பிரசங்கங்கள் செய்தார்கள்.

* * *

30-10-51 முதல் - மயிலம் முருகன் செந்தமிழ்க் கழகம் - மூர்த்தடி விழா நடைபெற்றது. பல அறிஞர்கள் பேசினார்கள்.

* * *

1-11-51 முதல் – மாயூரநாதர் - குமரன் கட்டளை-பல வித்வான்கள் சமயச் சொற்பொழி வாற்றுவார்கள்.

* * *

அரியலூர் மணிவாசகமன்ற எட்டாம் ஆண்டு நிறைவு விழா *14-10-51*ல் திருவையாறு திரு. P. திருஞானசம்பந்தம் பிள்ளை M.A., L.T. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முத்தமிழ்ப் பெருஞ்சொற்கொண்டல் - புரிசை திரு. சு. முருகேச முதலியார் 'வாதவூரர்' என்பதுபற்றிப் பேசினார்கள்.

* * *

பூவாளூர் திருப்புகழ் சபை ஆதரவில் 23-10-51 - ல் திருமுருக கிருபாநந்தவாரி அவர்கள் ''தாரக வதம்'' பற்றிச் சொற்பொழி வாற்றினார்கள்.

* * *

பெரம்பூர் - குமரகுருபரர் மன்றத்தின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா, சைவத்திரு. டாக்டர். வ. ஆ. தேவ சேனாபதி பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்தது. திருப் புகழ் சதுரர் - திரு. சே. த. இராமலிலிங்கம் பிள்ளையும், செல்வி - C. சரோஜினி, B.Sc. அவர்களும் பேசினார்கள்.

* * *

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகச் சார்பில் மெய்கண்ட தேவ நாயனார் திருநாள் 30-10-51-ல் திரு. ம. பாலசுப்பிர மணிய முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவாளர் - ச. சச்சிதானந்தம்பிள்ளை அவர்களும் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களும் சொற்பொழிவாற் றினார்கள்.

* * *

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழக சிவதல வார வழி பாடு 28-10-51-ல் ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் நடை பெற்றது. திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் 'மாவடி மாட்சி' என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள்.

* * *

திருச்செந்தூர் - ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான நிர்வாக அதிகாரி திரு. K. சிதம்பரம்பிள்ளை அவர்கள் 25-10-51 தம் பூத உடலை நீத்தனர். அவர்தம் ஆத்மா சாந்தி அடைவதற்காக 29-10-51 - ல் சண்முக விலாசத்தில் திரு. இராம சுப்புக் கோனார் அவர்கள் தலைமையில் ஒரு பிரார்த் தனைக் கூட்டம் நடைபெற்றது.

* * *

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையாரால் 30-10-51ல் மெய்கண்ட தேவநாயனாரின் 729-வது குருபூசை விழா கொண்டாடப்பெற்றது. பகலில் சிவாலயத்தில் குடமுழுக் கும், ஆராதனையும், இரவில் சபையின் இருப்பிடமான திரு ஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் மடாலயத்தில் சிறப்புவழி பாடும் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

* * *

சமாஜ செய்திகள்

அங்கத்தவர் பொதுக்கூட்டம்

நம் சமாஜத்திய நாற்பத்து ஆறும் ஆண்டு நிறைவு விழா நடத்துவதைப்பற்றிய காலம், இடம், தலைவர், நடைமுறை முதலிய விவரங்களை முடிவுசெய்ய சமாஜத்தின் பொதுக்கூட்டம் ஒன்று இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜனசபையில் 1951 நவம்பர் 24ம் தேதி சனிக்கிழமை மாலை 4 மணிக்குக் கூடும். அதுபோது கூட்டத்துக்கு வரவேண்டிய அங்கத்தவர் நிறைவெண் (Quorum) இல்லாவிடில் ஷ விஷயங்களைத் தீர்மானிப்பதற்கு ஷ இடத்திலேயே நவம்பர் 25-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்குச் சமாஜ விதிகளின்படி வருவோரைக்கொண்டு அக் கூட்டம் நடைபெறும்.

செயற்குழுக் கூட்டம்

செயற்குழு இராயப்பேட்டை, ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜனசபையில் நிகழ் நவம்பர் 25 - ம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குக் கூடும்.

சைவப்புலவர் தேர்வு

1951 டிசம்பர் 2-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை சைவப்புலவர் தேர்வு நடைபெறும். இடம், காலம் முதலியன அபேட்சகர்களுக்குப் பின்னர் தெரிவிக்கப்படும்.

சமாஜ மாநாடு

சமாஜத்தின் 46-ம் ஆண்டு விழாவும் சைவர் மாநாடும் குன்றக்குடியில் டிசம்பர் 22, 23, 24 தேதிகளில் சென்னை மாஜிபிரதமர் திருவாளர் - O. P. இராமசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெறும். மற்ற முழுவிவரம் அடுத்த இதழில் வரும்.

1951ஆம் டிசம்பர்மீ 31உக்குள் சமாஜக் காரியதரிசிக்கு அனுப்பி உபகரிக்க விரும்புகிறேம்.

7. குறித்தபடி மணியார்டர் செய்து அடுத்த ஆண்டுக்குச் சமாஜ அங்கம் வகித்துப் பத்திரிகை பெற விரும்பாமலோ, அல்லது முடியாமலோ இருப்போர், தயைகூர்ந்து முக்காலணு கார்டு மூலம் நமக்கு அறிவித்துவிட்டால் சமாஜத்துக்குப் பொருள் நஷ்டமும் கஷ்டமும் விளையா. பத்திரிகை பெற விரும்பாதாரும், இயலாதாரும் தயை செய்து தெரிவித்தலாகிய உபகாரத்தை யேனுஞ் செய்வார்களாக.

8. ஒவ்வொரு சந்தாதாரும் தமது திருத்தமான தபால் விலாசத்தைச் செவ்வையாக எழுதி உடனே அனுப்ப விரும்புகிறேன்.

இங்ஙனம் :
செயலாளர்.

சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜனசபையில் மகா கந்தர் சஷ்டிவிழா 30-10-51 முதல் 6-11-51வரை கொண்டாடப்பெற்றது தினந்தோறும் மாலையில் திரு சங்கு-சுப்பிரமணிய ஐயர், திரு. சே. த. இராமலிங்கம்பிள்ளை, திரு. கி. வா. ஜகந்நாதம், திரு. N. R. சுந்தரராஜன், திரு. க. கோவிந்தராஜ முதலியார், திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி ஐயர் அவர்களால் சொற்பொழிவுகள் நடைபெற்றன. 5-11-51 காலை விசேட பூசையும், 6-11-51 அன்று சங்கீதபூஷணம், புலவர் திரு.கு. புண்ணியகோட்டி, திரு. முருக விசாக நம்பி அவர்களால் இன்னிசைக் கருவிகளுடன் திருப்புகழ் பாராயணமும் நடைபெற்றன.

சமாஜ வெளியீடுகள்

சமாஜ வெளியீடுகள்		ரூ.	அ.
பெரியபுராணம்—அகராதியுடன்	...	3	0
நாலாயிரதிவ்ய பிரபந்தம்	...	3	0
சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன்	...	1	0
திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 1 0 திருவாசகம் மூலம்	...	0	4
திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி பொழிப்புரை		0	1
குகார்ச்சனை திருமந்திரம்	...	0	1
திருவாசகத் திரட்டு	....	0	6
கந்தரநுபூதி (உரையுடன்) 0 2 முருகன் முந்நூல்	....	0	3
அப்பர் திரட்டு 6 பை சம்பந்தர் திரட்டு	....	0	1
திருப்போரூர்ச் சந்நிதிமுறை	....	0	12
திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை ரூ. 8. அங்கத்தினருக்கு		7	0
சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் துகளறுபோதம் (மூலம்)	...	0	8
சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழி பெயர்ப்பல்ல.	...	0	2

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்) ஒன்று ஒரு ரூபா விதமும், முழுமலரல்லா தனி இதழ் ஓர் அணா விதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 3 (1930), 4 (1931), 14 (1941), 22 (1949)]

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street. Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 40, Muthiah Mudali Street, Vellala Teynampet, Madras-6, P.I.Card No. M. S. 81.